உ உ

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா துணை!

# நாயன்மார் இவரன்றோ!

அகிலா கார்த்திகேயன்

பகவான் யோகமூர்த்தி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாள்
மீளா அடிமை டிரஸ்ட்
நெ. 54, ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தெரு,
பங்காரு அம்மன் தோட்டம், காஞ்சிபுரம்.
தொலைபேசி : 044 - 27237360
அகிலா கார்த்திகேயன் : 9940326561

# தெய்வம் அருளிய முன்னுரை

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பது சத்தியவாக்கு. குழந்தையைக் கண்டால் குதூகலம் அடைகிறோம். தெய்வத்தின் தரிசனத்தால் பரவசமடைகிறோம். அப்படி பரவசப்பட்டு பக்தி செய்யும் போது நாம் பக்தி செய்யும் தெய்வம் நம் முன்னே ஸ்தூலமாக உருவெடுத்து நிற்க வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதில்லை. நாம் பார்க்கும் சிலா ரூபமோ, தெய்வத்தின் ஓவியமோ நம்மில் ஒரு அசையாத நம்பிக்கையை ஊட்டியிருக்க அதுவே நம் பக்திக்கான பரவசத்தை முழுமையாக்கிவிடுகிறது.

அச்சிலை தெய்வமோ, அந்தப் பட தெய்வமோ அப்படிப்பட்ட கொண்டாடிடும் பக்தர்களிடத்திலேதான் ஒரு விசேஷமான பாத்தியதை கொண்டிருக்கும் என்பதைத்தான் அந்த பழமொழியான ‘தெய்வமும் கொண்டாடும் இடத்திலே’ மகிழ்வடைவதை சொல்லியுள்ளார்களோ என்னவோ!

இப்படி சிலாரூபமாகவும், சித்திரரூபமாகவும் நாம் கொண்டாடி மகிழும் தெய்வம் சில விசேஷ காலகட்டங்களில் தானே இவ்வுலகில் ஒரு திருஅவதாரம் கொண்டு நம்மில் ஒருவராகவே தோன்றி அருள்பாலிக்க மாமனம் கொள்வதுண்டு.

நம் எந்த ஜன்மத்தில் நம் எல்லோருக்கும் இப்படி ஒரு திருஅவதார காலகட்டத்தில் நம் ஜன்மம் அமையுமென்று தெரியாது. எத்தனையோ புண்ணியம் செய்திருந்தால்

மட்டுமே ஒரு திருஅவதார காலத்தில் நாம் பிறக்கும் பெரும்பாக்யம் கிட்டும்.

ஸ்ரீமந் நாராயணனின் திருஅவதாரங்களில் விசேஷமாக கருதப்படும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் திருஅவதார கட்டமும், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் லோக சஞ்சார கால கட்டங்களும் இப்படி அந்தந்த காலகட்ட ஜனங்களுக்குப் பெரும்பாக்யம் அருளியுள்ளன.

இப்படி தெய்வமே ஸ்தூலமாகத் தோன்றி நம்மிடையே அருள் செய்வதை மறைக்க மாயை பெரும் பங்கு கொண்டு அத் தெய்வத்தை பலருக்கும் திரைபோட்டு மறைத்துவிடுகிறது.

மகா கருணையோடு உதிக்கும் தெய்வங்களுக்கு எல்லா ஜனங்களுக்கும் பாரபட்சமில்லாமல் தன் திருஅவதார ரகசியம் தெரிய வேண்டுமென்று எண்ண மிருந்தாலும் இந்த லோக மாயை அத் தெய்வத்தின் மகாகருணையையும் மீறி அத்தெய்வ ரகசியத்தை காப்பற்ற எத்தனிக்கிறது.

கூடவே மனித திருஉருவில் திருஅவதாரம் கொள்ளும் தெய்வங்கள் ஒரு மானுட எல்லையை மீறி செயல்படாமல் தன்னை வேறுபடுத்தி உயர்வோடு காட்டிக் கொள்ளாமல் தனக்குத்தானே தடைபோட்டுக் கொண்டு ஒரு சாமான்ய மனுஷராகவே தன்னை தாழ்த்திக் கொள்வதிலும் அந்த மானுட ஜன்மங்களில் விதிக்கப்படும் சிரமங்களை ஏற்றுக் கொள்வதிலும் நமக்கெல்லாம் உதாரணம் காட்டவே அமைத்துக் கொண்டுள்ளதைக் காண்கிறோம்.

இப்பேர்ப்பட்ட மேன்மையிலும் அத் தெய்வங்களுக்கும் தன்னை ஒரு சொற்ப அளவு மானுடர்கள் உணர்ந்து கொண்டாடினால் அதை குழந்தை மனதோடு ஏற்க ஒரு ஏக்கம் இருக்கக் கூடுமோ என்று தோன்றுகிறது.

அதனாலேயே தன் திருஅவதார கட்டங்களில் தன்னை பூர்ணமாக பக்தி செய்ய சில புண்ணியப் பிறவிகளையும் தன் கூடவே தோற்றுவித்து அழைத்து வருவது போலவும் நினைக்க வைக்கிறது.



ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனே என்று தாயார் கைகேயியையும் அறியாமல் செய்த மாயை அதே திரு அவதாரத்தின் மேல் அளவிலா பிரேமையும் பக்தியும் கொண்ட ஸ்ரீ அனுமனை நெருங்கவில்லை. அவதரித்தருளுவது ஸ்ரீமந் நாராயணனே என்ற உணர்விருந்ததோ இல்லையோ அந்த ஸ்ரீராம மூர்த்தியை தெய்வமாகக் கொண்டாடி மகிழும் பெரும்பாக்ய மடைந்த பக்தனாய் ஸ்ரீமாருதியின் அவதாரமும் அந்த காலகட்டத்திலேயே நிகழ்ந்துள்ளது.

அதே போல் ஸ்ரீகிருஷ்ண திருஅவதாரத்திலும் பரமாத்மாவை பக்தி செய்த புண்ணிய பிறவிகள் தோன்றியுள்ளன.

இதையெல்லாம் நாம் அறியும்போது ஒவ்வொரு திருஅவதார கால கட்டத்திலும் அந்த திருகோலத்தின்மேல் அபரிமிதமான பக்தியும் பணிவும் கொண்டு ‘நீயன்றி வேறு தெய்வமில்லை’ என்ற பரிபூர்ண உறுதியோடு திகழ்ந்த புண்ணிய பிறவிகளையும் தோற்றுவிப்பது அத் தெய்வத்தின் திட்டமே என்பது தெரிகிறது.

அப்படி இல்லை என்று கருதினாலும், உதித்திருப்பது தெய்வம்தான் என்ற உணர்வு அனுமனைப் போன்றே சில சிரஞ்சீவி பக்தர்களுக்கு மட்டுமே விசேஷமான அனுக்ரஹமாக அவர்தம் பூர்வ புண்ணிய பலன்களால் கிடைத்திருப்பது உண்மையே.

ஆக எந்த ஒரு தெய்வமும் தன் பெரும் கருணையால் உலகில் திருஅவதாரம் கொள்ளும் சங்கல்பம் செய்யும்போது கூடவே தன்னிடம் ஒரு உறுதியான பக்தி கொண்டு சதா சர்வகாலமும் அச்சிந்தனையோடு மட்டுமே இருக்கும்படியான மனப்போக்கு படைத்த புண்ணியர்களையும் தன்னுடனேயே அழைத்து வருவதை அறியமுடிகிறது.

விருப்பு வெறுப்பில்லாத அத்தெய்வத்தின் தன்மைக்கு மாறாக அப்பக்தன் தன்மீது வைக்கும் அபரிமிதமான பக்தியை ரசிக்கும் ஒரு குழந்தை மனம் அந்த தெய்வத்தன்மையுள்ளும் இருக்கலாம் போலும்.

அதே குழந்தை விளையாட்டுபோல் தன் விசேஷ பக்தரை எப்போதுமே சோதனை செய்து பார்ப்பதும் அத்தெய்வத்தின் தன்மையாகக் காண்கிறோம். எந்த சோதனையைத் தந்தாலும் அந்த பக்தன் மனம் தளராமல் தன் மேலுள்ள பக்திசிரத்தையை தளர்த்திக் கொள்கிறானா பார்ப்போம் என்று அத் தெய்வத்தின் சோதனை பக்தனை புடம்போட்டும் பார்க்கிறது.

இப்படிப்பட்ட தெய்வத்தின் விளையாடல்களை திருவிளையாடல்கள் என்று மேன்மைப்படுத்திச் சொல்வதுண்டு.

தெய்வம் நடத்தும் இந்த பரீட்சையில் தேர்வு பெற்ற ஒரு நிலையில்தான் அந்த பக்தர்கள் நாயன்மார் களாகவோ, ஆழ்வார்களாகவோ இவ்வுலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

இப்படி, நாயன்மார்கள், ஆழ்வார்களென்று சில உன்னத பிறவிகளையும் தோற்றுவிப்பதும் அப்படிப்பட்ட உயர்நிலை பக்தர்களின் மூலம் தெய்வத்தின் மேன்மையை அறியச் செய்வதும், பக்தி என்பது எப்படி இருக்க வேண்டுமென்று மற்ற சாமான்ய மக்களுக்கு காட்டுவது இவையெல்லாமுமே அந்த தெய்வத்தின் திருவிளையாடல்களே!

நாயன்மார்களோ, ஆழ்வார்களே ஸ்தூலமாக தெய்வங்கள் உலகில் உதித்த காலகட்டத்தில் பக்தியின் மேன்மையை காட்டியவர்கள் அல்லர். அத் தெய்வம் திருஅவதாரமாக காட்சிதராத நிலையிலும் தன் உறுதியான பக்தியால் தெய்வத்தைப் விடாப்பிடியாக பற்றிக் கொண்டு அத் தெய்வத்திடம் எப்படி பக்தி செய்வதென்பதை உலகோருக்கு காட்டியவர்கள்.



ஆனால் அத் தெய்வங்களின் சோதனைகள் மட்டுமே இவர்களுக்கு சத்திய அனுபவமாகி அத்தெய்வமிருப்பதை உறுதியாக்கியுள்ளது.

**தி**ருமாலைப்போல் ஈஸ்வரர் திருஅவதாரம் பூண்டு உலகில் ஸ்தூலமாக சஞ்சாரம் செய்யவில்லை என்று பலர் கருதலாம். ஈஸ்வரரைப் பொருத்தவரை அவர் நாயன்மார்களை சோதிக்க அவ்வப்போது வெவ்வேறு மனிதரூபத்தோடு தோன்றி சோதித்து முடிந்ததும் அவர்களுக்கு வந்தது தான் தானென்று உணர்த்தி அருளிவிட்டு மறைந்ததை திருவிளையாடலாக படிக்கின்றோம்.

ஈஸ்வரர் ஸ்ரீராமனைப்போல், ஸ்ரீகிருஷ்ணரைப் போல் சில கால அவகாசம் ஒரு பிரத்யேக திருக்உருகொண்டு உலகில் தோன்றியருளவில்லை என்று ஈஸ்வரபக்தர்களுக்கு ஏக்கம் இருந்திருக்கக் கூடும்.

அதனால்தானோ என்னவோ பரமேஸ்வரின் பெரும் கருணை இக்கலியுகத்திலேயே ஒன்றல்ல இரண்டுமுறை தன்னை மிக மிக எளிமையாக்கிக் கொண்டு அருள்செய்ய உலகில் தோன்றியுள்ளது.

ஒரு ஆன்மீக மலர் புத்தகத்தை யதேச்சையாக இச்சமயத்தில் (இதை எழுதும்போது) திறந்து பார்த்தபோது அதில் ஒரு கேள்வி - பதில் பகுதியில் இது தொடர்பான ஒரு சங்கதியைப் பார்க்க நேர்ந்தது.

திருமாலுக்கு தசாவதாரம் போல, சிவனுக்கு அவதாரம் இல்லையா? என்ற கேள்விக்கு மயிலாடுதுறை ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் சொல்லும் பதில் இது.

“அவதாரம் என்பது தன் நிலையிலிருந்து கீழிறங்கி உதவுதல், சரபேஸ்வரர், பைரவர், கங்காதரர், தட்சிணாமூர்த்தி என சிவனுக்கு வடிவங்கள் உள்ளன.

திருமால் மனிதனாகப் பிறந்ததால் அவதாரம் என குறிப்பிடுகிறார்கள். சிவன் பிறப்பு இல்லாமல் நேரடியாக தோன்றுவதால் அவதாரம் என்று சொல்வதில்லை”

இப்படி சிவாச்சாரியார் சொல்லிய பதிலின் சத்தியத்தை அந்த ஆதிசிவன் நம்மிடையே ஆதிசங்கரராகவும், அதே ஆதிசங்கரர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளாகவும் நேரடியாகவே அதாவது சாக்ஷாத் தட்சிணாமூர்த்தி எனும் ஞானகுருவாய் தோன்றியுள்ள உன்னதம் நிகழ்ந்துள்ளது.

எந்த துஷ்டர்களையும், அசுரர்களையும் வதம் செய்யும் அவசியம் இல்லை என்றாலும், உலக ஜனங்களின் மனதில் இந்த கலியுகத்தின் பாதிப்பால் குடிகொண்டு ஆட்டுவிக்கும் அசுரத்தனங்களையும், துஷ்டத்தனங்களையும் சம்ஹாரம் செய்ய வில், அம்பு, திரிசூலம் என்ற ஆயுதங்களை தாங்கி ஒரு விசேஷமான அவதாரம் பூண்டு வர அவசியமில்லை.

மேலும் மக்களின் மனதில் புகுந்திருக்கும் தோஷங்களை களைய அவர்களுக்கு நல்உபதேசம் செய்யும் தட்சிணா மூர்த்தியான தன் சொரூபத்திலேயே தோன்றுவதுதான் உத்தமமென்றும் ஈஸ்வரசித்தம் இருந்திருக்கும்.

முதலில் ஆதிசங்கரராய் அவதரித்த ஈஸ்வரருக்கு அந்த காலகட்ட தோஷங்களை அகற்றவும், ஷண்மத ஸ்தாபனம் செய்து சநாதன தர்ம வைதீக மதத்தின் மேன்மையான தத்துவங்களை போதித்தருளி அன்றைய ஜனங்களின் மனதை தூய்மை படுத்தவும் மிகச் சொற்பமான முப்பதாண்டு கால அவகாசமே போதுமென்றிருந்தது.

ஆனால் அந்த ஈஸ்வரரையே ‘சிவனே’ என்று நிம்மதியாக நாம் இருக்கவிடவில்லை. ஆதிசங்கரர் காலத்தில் அகற்றப்பட்டு விரட்டப்பட்ட பல தோஷங்களுடன் இன்னும் சில தோஷங்களும் மெல்ல மெல்ல பின்னால் வந்த இரண்டாயிர வருட காலகட்டத்தில் லோகத்தில் பயனற்ற காடாய் மண்டத்துவங்கின.

கலிகாலம் என்ற மாயைக்கு பெரும் கொண்டாட்டமாகி மனித மனங்களை பல்வேறு தீமைகளும், சஞ்சலங்களும், மாற்று அபிப்ராயங்களும், நாகரீக பாதிப்புக்களும் விகாரமடையச் செய்தன. தர்ம



நெறிகளை ஜனங்கள் சிறிது சிறிதாக மறக்கவும் துறக்கவும் ஆரம்பித்து தெய்வசிந்தனை அகன்று எல்லோர் மனமும் மாசுபட்டுக் கொண்டிருந்தது.

வேதம் கற்பித்த நெறிகளுக்கு எதிரான வாதங்கள் மலியத் தொடங்கின. சனாதன தர்மவழி, வேதநெறி வழி இவைகளுக்கு எதிர்மறைக் கருத்துக்களால் சில பலகீனமான மனங்கள் ஈர்க்கப்பட்டு பாரம்பரியமாக, வாழையடி வாழையாக, வம்சங்களின் தொடர்ச்சியாக இருந்து வந்த நல்நெறிகள் சிறிது சிறிதாக மறக்கப்பட்டு, மறுக்கப்பட்டு வாதிடும் நிலையில் அயல் நாட்டினர் ஆதிக்கமும் தூண்டுகோலாயின.

நவநாகரீகம் என்ற பெயரில் பல அவநாகரீகங்களுக்கு தன்னையும் அறியாமல் ஜனங்கள் ஆட்பட்டு அதன் விளைவாக சாத்வீக சம்பிரதாய வாழ்க்கை நெறியில் கிடைத்திட்ட ஆனந்த அனுபவங்களும், மங்களங்களும், சௌபாக்யங்களும் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கின.

லோகமாதாவிற்கு பெரும் தாபம் ஏற்பட்டது. “மகாபிரபோ ஈஸ்வரா....” என்று தன் வருத்தத்தை அறிவிக்க தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மகாதேவரிடம் தன் குறையைச் சொல்ல எத்தனித்த போது அங்கே அவரைக் காணவில்லை.

லோகமாதா பதட்டப்பட்டு கீழே பூலோகத்தை நோக்கினாள். அங்கே பாலசங்கரன், மஹாலட்சுமி தாயார் மடியில் லோகத்தில் அவதரித்துவிட்ட ஆசுவாசத்தைக் காட்ட சிவாசிவா எனும் குவாகுவா நாமம் ஒலித்துக் கொண்டிருந்தான்.

அந்த தெய்வீக ஒலி உமையம்மைக்கு ஒரு செய்தியை அறிவித்தது.

“உமையே..... இப்போதைய பூலோக சஞ்சாரம் பல ஆண்டுகளாக நீடிக்கும் போலுள்ளது. அதனால்தான் நீயாகவே உன் உளம் கனிந்து உன் பூர்ண விருப்பத்தோடு

இதற்கு இசையவேண்டுமென்று காத்திருந்தேன். நீ மகாபிரபோ ஈஸ்வரா என்று தொடங்கியபோதே உன் மனதின் ஆதங்கம் எனக்கு தெரிந்துவிட்டது. இனி ஒவ்வொரு நொடியும் லோக ஜனங்களை ஆட்டுவிக்கும் தோஷங்களிலிருந்து காப்பாற்றத் தேவைப்படுவதாக உள்ளதால் உடனே இந்த தாயாரின் புண்ணிய மணிவயிற்றை தேர்ந்தெடுத்து உதித்துவிட்டேன்” என்ற ஈஸ்வர ரகசியம் பார்வதி தேவியின் காதில் மட்டும் மெலிதாக விழுந்தது.

உலகம் உய்ய குருதியும் தேகமுமாக உமா மகேஸ்வரர் புவியில் தோன்றிவிட்டார். மணாளன் சுவாமிநாதனாய் பூவுலகில் பிறந்திருக்க எப்போதும் பிரிந்தறியாத நிலையில் அந்த பாலசங்கரருக்கு தாயாக புவனேஸ்வரி மாதா அன்னை காமாக்ஷியின் கருவறையில் தானும் குடிகொண்டு விட்டாள்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் சர்வேஸ்வரரும், தேவி காமாக்ஷியும் இப்புவியில் வாசம் செய்ய மாஉளம் கொண்டு வந்திட்ட நிலையில், அங்கே கைலாயத்தில் ரிஷபாரூடர் வீற்றிருந்த சன்னதி வெற்றிடமாகிவிட்டது.

லோகநாயகரையும், லோகமாதாவையும் தன் மேல் அமர்த்தி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்த ரிஷபத்திற்கு இரு பெரிய தாபத்தை உண்டாக்கிவிட்டது.

“ஈஸ்வரா! சதாசர்வ காலமும் பார்வதி பரமேஸ்வரராய், உமாமகேஸ்வரராய், நீலகண்டராய், மகாபிரபுவாய், சதாசிவமாய், கைலாசபதியாய், பசுபதியாய், மகாதேவராய், பரமேஸ்வரராய்.... மனதிலும் உடலிலும் தாங்கிய பெரும்பாக்யம் கொண்டிருந்த நான் நிர்க்கதியாக நிற்கிறேனே... நின் நினைவில்லாது நின் பூவான திருமேனியைச் சுமக்காது நான் இப்படி உயிர்மூச்சு விடுவேன்... என் மனம் தாளவில்லை. உன் கருணையால் இதற்கொரு வழிகாட்டப்பா” என்று பிரதோஷ காலத்தில் சிறப்பிக்கப்படும் நந்தியான ரிஷபம் மனதுள் உருகி வேண்டிக் கொண்டிருந்தது.



ஈஸ்வரரின் பெரும் கருணை காலம் கனிய காத்திருந்தது. சாக்ஷாத் ஈஸ்வரரான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா சுவாமிநாதராய் திரு அவதாரம் செய்த புண்ணிய தினம் ஜயவருடம் வைகாசி அனுஷமாய் அமைய, அந்த ஈஸ்வர சித்தம் நந்திகேஸ்வரரின் தாபத்தைப் போக்கிட 60 வருட சுழற்சியில் அடுத்துவரும் ஈஸ்வர வருடத்திற்காக காத்திருந்தது.

ஸ்ரீ ஈஸ்வர வருடம் ஐப்பசி மாதம் ரேவதி திருநட்சத்திரத்தில் அந்த நந்தீஸ்வரரும், ரிஷபருமான புண்ணிய மூர்த்தியை ஈஸ்வரகிருபை இவ்வுலகில் தன்னுடன் அழைத்துக் கொண்டு ஆனந்தமருள விழைந்தது.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளெனும் சர்வேஸ்வரர் இவ்வுலகில் ஸ்தூலமாக அருளிய காலகட்டத்தில் இப்படி ஒரு விசேஷமான புண்ணியப் பிறவியாக நந்திகேஸ்வர மூர்த்தியும் இவ்வுலகில் அவதாரம் செய்து அந்த ஈஸ்வர திருஅவதார தெய்வ ரகசியத்தை முற்றிலும் அறிந்தவராய் அத்தெய்வத்தை உலகோர் அனைவருமே அறிந்து பக்தி செய்து பரவசமடைய வேண்டுமென்று சதாகாலமும் நினைத்தவராய், அப்படிப்பட்ட மேன்மையான தெய்வத்தின் அனுக்ரஹம் பிற்கால சந்ததிகளுக்கு சாஸ்வதமாகிட வேண்டும் என்பதை தன் அவதாரக் குறிக்கோளாக்கி, அதை தன் தளராத விரதங்களாலும், தபஸ் மேன்மையாலும் நிறைவேற்றி இப்பூவுலகிற்கு ‘பிரதோஷ சிவ நாயன்மார்’ என்று தன்னை அடையாளம் காட்டி அருளியுள்ளார்.

நந்திகேஸ்வரரின் இப்புவி பிரவேசம் ஒரு இயற்கையான வினோத ஒற்றுமையை ஏற்படுத்தி தக்க சமயத்தில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் சங்கரரை பிரதோஷம் தோறும் தரிசிக்க நினைக்கும் ஒரு ஸ்புரிப்பை தானே ஏற்படுத்தி விட்டது.

பின் ‘பிரதோஷம் மாமா’ என்ற அடைமொழியுடன் அழைக்கப்படும் விசேஷமான இவர்தம் தளராத, உறுதியான பக்தி இவரை 64 ம் நாயன்மார் என்றும் பிரதோஷ சிவ நாயன்மார் என்ற மேன்மைகளை ஈட்டித்தந்தது.

மற்ற 63 சிவனடியார்கள் சிலாரூபமாக தரிசித்த சிவனின் பால் கொண்டிருந்த சிந்தை நிலை மாறாத சிவபக்தியே அவர்களை சிவனடியார்கள் என்ற சிறப்பை அளித்துள்ளன. வேதநாயகரை இந்த சிவனடியார்களெல்லாம் லிங்கவடிவ மாகத்தான் தரிசித்து பக்தி செய்திருக்க முடியும். அயராத பக்தியும் சோதனைகள் வந்தபோதும் தளராத உறுதியுமே இவர்களுக்கு அந்த க்ஷணநேரம் ஈஸ்வர தரிசனத்தைத் தந்தருளி இவர்களை நாயன்மார்கள் என்று உலகம் ஏற்றுக் கொள்ளச் செய்திருக்க வேண்டும்.

இன்றும் நாயன்மார்கள் உண்டு என்பதுபோல் பிரதோஷ சிவநாயன்மாரை இப்படி ஒரு மேன்மையான நிலையில் சேர்க்க ஈஸ்வரரால் அருளப்பட்டுள்ள விதமே 'நாயன்மார் இவரன்றோ' என்று நம்மை வியப்படையச் செய்கிறது.

(முன்னுரையின் தலைப்பில் 'தெய்வமே அருளிய முன்னுரை' என்பதாக இந்த முன்னுரையை முடிக்கும் போதுதான் ஒரு அடைமொழியைக் கொடுத்தேன். அதன் காரணமும் தெய்வத்தின் அனுக்ரஹமே. 'பிரதோஷ சிவநாயன்மாரை', 'நாயன்மார் இவரன்றோ!' என்று வியக்க வைக்கும் விசேஷங்களை புத்தகவடிவில் பக்தர்களுக்கு வழங்கிட வேண்டுமென்றுதான் எழுத ஆரம்பித்தேன்.

நான் சற்றும் யோசனை செய்யாமலேயே மனதில் தோன்றியதை எழுதத் தொடங்கினேன். அதே நிலையிலேயே இதைத் தொடர்ந்து எழுதி இந்த முன்னுரையை எப்படி முடிப்பது, எப்படி ஈஸ்வர திருஅவதாரத்துடன், இந்த பிரதோஷம் மாமா வெனும் புண்ணிய பக்தரின் பிறப்பையும் முடிச்சுப் போடுவ தென்றெல்லாம் சற்றும் ஒரு சிந்தனை செய்யாமலேயே அதுவாகவே இப்படி நந்திகேஸ்வரருடன் இந்த நாயன்மாரை ஒப்பிட்டு எழுதும்படி அமைந்துவிட்டது.



இது ஒரு கற்பனையாகத் தோன்றாமல் முன்னே யோசித்து மனதில் ஸ்புரித்தது போலல்லாமல் ஸ்ரீ மஹாபெரியவாளின் பூர்ண அனுக்ரஹமே இப்படி எழுத வைத்துள்ளதென்பது சத்தியம்.

இப்படி எழுதிடும்போது நந்திகேஸ்வரரைப் பற்றி இன்னும் கொஞ்சம் விபரமாக படித்துக் கொண்டு எழுதலாமென்று நினைத்து புத்தக அலமாரியில் வரிசையாக செங்குத்தாக நிறுத்தப்பட்டிருந்த பல்வேறு ஆன்மீக புத்தகங்களுக்கு நடுவே தேட முதலில் கை வைத்து எடுத்த புத்தகமே 'துன்பங்கள் நீக்கி சகல காரியசித்தி தரும் 'பிரதோஷம்' என்ற தலைப்பை ஏந்தி வியக்க வைத்தது.

ஆக அதுவாகவே எழுத்துக்களாக வந்து விழுந்த வார்த்தைகள் அத்தனையும் தெய்வத்தின் அனுக்ரஹமே என்பதும், இந்த ஈஸ்வர திருஅவதாரத்தில் சிவன் சம்பந்தப்பட்ட நந்திபகவானே பரமபக்தராய் தோன்றியிருப்பதும் சத்தியமே இதன் மூலம் எனக்கு உணர்த்தப்பட்டதுபோல் அமைந்துள்ளது.

அதனால்தான் இந்த முன்னுரையை தெய்வமே அருளியதாகக் கருதுகின்றேன்.)

❖ ❖ ❖

# 1. 'நாயன்மாரே' என்று காட்டிட்ட நன்னாள்!

ஈஸ்வரரின் சித்தம் நந்தியம் பெருமானை இவ்வுலகில் தோற்றுவித்து தன் முன்னே தரிசித்து நிற்கும் பெரும்பாக்யம் நல்கிட விழைந்திட்ட நிலையில் அதற்கான காலகட்டத்தையும் சூழலையும் பொருத்தமான தம்பதியினரையும் தேர்வு செய்ய வேண்டி காத்திருந்தது.

ஒரு தெய்வாம்சமிக்க தமிழ்க் கவிஞர் ஈஸ்வரராம் ஸ்ரீபெரியவாளைத் தரிசிக்க வந்தார். அவர் ஒரு ஆசு கவி. உண்டு பண்ணி உட்கார்ந்து எழுதும் கவிஞரல்ல. அவரிடமிருந்த விசேஷமான வாக்கின் சக்தி அவர் யாரை புகழ்ந்து பாடினாலும், அவர்கள் மேன்மையடைவதும் எப்போதாவது தாளாத கோபத்தில் மனம் வருந்தி ஒருவர்மேல் கவிதையால் வசை பாடினால் அதுவும் பலித்தே தீரும்.

அப்படிப்பட்ட சரஸ்வதி கடாக்ஷம் பெற்ற அந்தக் கவிஞர், சாக்ஷாத் சர்வேஸ்வரரான ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி எனும் காஞ்சி பீடாதிபதியை தரிசிக்க வருகிறார்.

அவர் திருநாமம் ஸ்ரீவைத்தியநாத சர்மா என்பதாகும்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளை மற்ற எல்லா பக்தர்களும் அந்த காலகட்டத்தில் அதாவது ஒரு பீடாதிபதி என்ற நிலையில் பக்தி செய்து கொண்டிருக்க, இந்தக் கவிஞருக்கோ அந்த பீடாதிபதிக்குள் காட்சி தரும் பசுபதியைக் காணும் ஞானக்கண் இருந்தது.



ஸ்ரீ மஹா பெரியவாளெனும் பரமேஸ்வர திரு அவதாரத்தை தரிசித்ததும் மடை திறந்த வெள்ளமாய் அவர் திருநாவிலிருந்து சரஸ்வதி கவி மழையாய் சத்திய வாக்கை உதிர்த்தருளினாள்.

**திங்களஞ் சடைச் சிவபிரான் உருத்**
**தெரியவே விளங்கு அரியதோர் மகான்**
**மங்களம் பெறச் சங்கரன் பெயர்**
**மாநிலத்திலே தான் நிலைக்கவா**
**எங்களின் குரு தெய்வமாகி நின்று**
**எம்மை ஆளும் செம்மலா இவன்**
**டங்கு சந்திர சேகரேந்திர**
**சரஸ்வதி பதம் சரண் அடைந்தனன்**

இப்படிப்பட்ட சரஸ்வதி கடாக்ஷம் ஒரு சாத்வீக கவிஞரைத்தான் தில்லை நடராஜராம் நம் ஸ்ரீ மஹாபெரியவா நம் நாயன்மாரை ஈன்றெடுக்கும் உத்தமராய் தேர்வு செய்திருந்தார்.

கவிச் சக்கரவர்த்தி, கவிக்குஞ்சரம் என்றெல்லாம் பட்டம் சூட்டி அந்த தெய்வீக கவிஞரை மேன்மைப்படுத்தி ஸ்ரீ பெரியவா அருளியபோது

**உலகில் புகழ் பெற்றேன்**
**அதி உயர் பெற்றிடல் உற்றேன்**
**அலகில் தமிழ் கற்றேன்**
**எனும் மமதையில் அறிவுற்றேன்.**
**கலை பற்பல கற்றேன்**
**அவை காணப் புவி ஏற்றேன்**
**இலக்கப் பெறு பரிசால்**
**எழில் இகவில் புகழ் உற்றேன்**

என்று அவரது திருநாவிலிருந்து தான் ஒரு நாயன்மாரை இப்பூவுலகிற்கு ஈன்று தரும் புகழ் பெற்றதையும் புகழ் உற்றதையும் பெரியவாளின் முன் கவியாகப் பாடி பெருமை கொண்டாடும்படி அமைந்தது.

இப்படி இப்புவியில் திருஅவதாரம் புரிந்து நம் முன்னே காட்சி அருள்வது சாக்ஷாத் சர்வேஸ்வரரே என்ற திடமான சிந்தை கொண்டிருந்த ஸ்ரீ வைத்திய நாத சர்மா எனும் புண்ணியரின் பக்தி வித்து இந்த நாயன்மாரை இவ்வுலகிற்கு அருளியுள்ளது.

மாதுஸ்ரீ தஞ்சம்மாள் எனும் புண்ணியவதியின் மணிவயிற்றில் உருவாகிய நாயன்மார் இவ்வுலகில் உதிக்க ஒரு நன்னாளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அவர் காத்திருந்த அந்த நாளும் அவரை நாயன்மாரென்று அடையாளம் காட்டிவிட்டது. பிறந்த நாள் எப்படி நாயன்மாரென்று உறுதி செய்ய முடியும் என்று கேட்கலாம்.

உலகில் எல்லாப் பிறவிகளுக்கும் ஒரு அர்த்தமுண்டு என்றிருக்க உலகமே போற்றும் பெரும் குரு தெய்வத்திற்கு ஒரு மாபெரும் கற்கோயிலை பெருங்கோயிலாக அர்ப்பணிப்பதே தன் பிறவியின் உயர்நோக்கமாக சங்கல்பித்ததை தன் பிறவியின் புண்ணிய அர்த்தமாகக் கொண்டு ஜனிக்கப் போகும் நாயன்மாருக்காக அந்த நன்னாள் காத்திருந்தது.

அந்த திருநாளையும் தெய்வமே உத்தேசித்திருந்தது.

உதிக்கப்போகும் நாயன்மாரின் ஜன்மதினத்தை ஏற்கனவே அருள் செய்திட்ட ஒரு நாயன்மாரின் ஜன்மதினம் முடிவு செய்திருந்தது.

யார் அந்த நாயன்மார்? அவருக்கு இதில் என்ன சம்பந்தம் என்ற கேள்விகளுக்கான விரிவான விளக்கத்தில் இந்த பிரதோஷ சிவ நாயன்மாரின் ஜன்மதின விசேஷத்தை அறியலாம.

திருநின்றவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் பூசலார் என்ற பெரியவர். நன்னெறியாகிய சிவநெறியை பற்றிக் கொண்டு வாழ்ந்தவர். வேதம், நீதி இவைகளை கற்றுணர்ந்தவருக்கு பொருள் ஈட்டும் கலை தெரியவில்லை.



சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் பணி செய்வதையே தன் பிறவியின் கடமை என்ற உறுதியுடனும், தெய்வ பக்தியுடனும் வாழ்ந்தவருக்கு ஒரு உன்னதமான ஆசை ஆவல் எழுந்தது.

'ஒரு சிவாலயம் எழுப்பினாலென்ன?' இப்படி அவர் மனதில் ஒரு ஏக்கம். அன்றைய ராஜாக்களே பலர் கோயில் எழுப்பும் பொருள் வளமும், மனித உழைப்பும் பெற்றிருந்தும் அதில் சிலருக்கே அப்படி ஒரு கோயிலை பூர்த்தியாக கட்டி முடிக்க முடிந்துள்ளது. மேலும் சில கோயில்களை வாரிசு வாரிசுகளாக தொடர்ந்து முயற்சித்துத்தான் உருவாக்கி யுள்ளனர்.

அப்படியிருக்க இந்த ஏழை அந்தணரின் ஆதங்கம் செயல்வடிவமாகப் போவதில்லை என்பது உறுதி.

ஏதோ ஒரு மனக்கனவு என்ற வகையில் இது நமக்கு தோன்றினாலும் சதாசர்வகாலமும் சிவனையே சிந்தையில் கொண்ட பூசலார் நாயனார் இதை அலட்சியப்படுத்தி மனதிலிருந்து அகற்றிவிடவில்லை.

கோயிலைக் கட்ட துணிந்துவிட்டார்.

எப்படி? கல்லில்லை, கடப்பாரையில்லை. கனவுகண்ட கோயில் கற்பனையிலேயே உருவாகத் தொடங்கி விட்டது. அது வெறும் கற்பனையாக மட்டுமில்லாமல் அந்த சிவனடியாரின் சிரத்தையே அதற்கு உயிரூட்டிக் கொண்டிருந்தது.

தினம் திடசிந்தையோடு தியானத்தில் அமர்ந்து விடுவார். கோயிலுக்கான அஸ்திவாரத்தை மனதுள் பல உழைப்பாளிகளை உற்பத்தி செய்து தோண்டுவார். அடுத்து கோயில் மதிலுக்கான கற்களை விலைபேச கற்பனைக் குதிரையில் பறப்பார். மாசற்ற மனம் எனும் பணத்தைக் கொண்டு கற்களை வாங்கி வருவார். மனதுள் மதில் எழும்.

இப்படியே ஒரு உண்மையான கோயில் எழும்ப எத்தனை அவகாசம் ஆகுமோ அத்தனை அவகாச நாட்களாக சிவனடியாரின் தவம் அந்த மனக்கோயிலை உண்மையான பக்தியுடன் கட்டி முடித்துவிட்டது.

சிவனடியாரின் தவ வலிமையோடு எழும்பிய கோயிலுக்கு கும்பாபிஷேக நாளையும் குறித்துவிட்டார்.

"பரமேஸ்வரா! இந்த ஏழைபக்தனுக்கு உமக்கொரு கோயிலை அர்ப்பணிக்கவேண்டுமென்ற அபிலாஷை இருந்ததேயன்றி அதை கல்லும் கலவையுமாக உண்மை யிலேயே உருவாக்கிடும் செல்வமும் பொருளுமில்லை. உன் திருவருளாலும் பெருங்கருணையினாலும் என் பக்தி சக்தியினால் என மனதிலேயே உனக்கென ஒரு கோயில் எழுப்பிவிட்டேன்.

நீ என் மனக்கோயிலில் வந்து அமர்ந்து அருள்புரிய நல்ல நாளையும் நல்லலக்னத்தையும்கூட தீர்மானித்துவிட்டேன்.

ஏதோ இந்த அசடன் கேட்டபதாக நினைக்காமல் அந்த நல்லநேரத்தில் கும்பாபிஷேகம் நடக்க நீ அருள் செய்வதோடு அந்த மனக்கோயில் கருவறையில் நீ வந்தமர வேண்டும்."

உண்மையிலேயே தான் ஏதோ நிஜமான கோயில் கட்டிவிட்டு கும்பாபிஷேகத்தை குறித்துவிட்டதான பாவனையோடு அவரது அதீதமான பக்திநிலை இறைவனை வேண்டிக் கேட்டுக் கொண்டது.

இதே காலகட்டத்தில் காஞ்சிமாநகரில் ஒரு பல்லவ அரசன் நிஜமான கோயில் ஒன்றைக் கட்டி முடித்திருந்தார். இந்த அரசரும் தான் எழுப்பிய கோயிலுக்கான கும்பாபிஷேக நாளையும் வேளையையும் குறித்துவிட்டார்.

இதில் வியப்பு என்னவென்றால் அங்கே திருநின்ற ஊரில் பூசலார் நாயனார் தன் மனதில் கட்டிய கோயிலுக்காக குறித்த அதே நாளையும் வேளையையுமே இந்த அரசரும் உத்தேசித்து தடபுடலான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

கும்பாபிஷேக நாள் நெருங்கிவிட்டது. மெய்யான கோயில் கும்பாபிஷேகத்தின் பரபரப்புகள் ஏதுமின்றி தன் மெய்ஞானத்தால் எழுப்பிட்ட கோயிலுக்காக பூசலார் எந்த தடபுடலான ஏற்பாடுகளையும் செய்யவில்லை.



ஆனால் ஈசனின் சிந்தை செய்த ஏற்பாட்டினால் எழுந்த திருவிளையாடல் மன்னனுக்கு பெரும் கவலை கொடுக்க கனவு ரூபத்தில் வந்தது.

மன்னரின் கனவில் கும்பாபிஷேகத்தின் முதல் நாள் சிவபிரான் காட்சி தந்தார். கனவில் தெய்வங்களை தரிசிப்பது சத்தியமே என்ற நம்பிக்கை படைத்திருந்தனர் அக்கால பக்தர்கள்.

அப்படித் தோன்றிய சிவபெருமான் "உன் கோயில் கும்பாபிஷேகத்தை நாளையல்லாமல் வேறு சுபமுகூர்த்தத்தில் வைத்துக் கொள்வாயாக" என்ற அன்பான கட்டளையாக அரசரிடம் அறிவித்தார்.

தெய்வமே கனவில் வந்து இப்படி கட்டளையிட மன்னருக்கு ஒருபுறம் மகிழ்ச்சியும், இன்னொருபுறம் ஏன் இப்படி வேறு நாளுக்கு மாற்றும்படி தெய்வசித்தம் தடுக்கிறதென்ற வருத்தமும் மேலிட்டது.

அரசனின் மனதை படித்ததுபோல் "உன் பக்தியிலோ, சிரத்தையிலோ தோஷமில்லை. ஆனால் நானோ வேறொரு பக்தனுக்காக அவர் திருநின்றவூரில் கட்டியுள்ள கோயிலின் கும்பாபிஷேகத்திற்கு இதே முகூர்த்தத்தில் போயாக வேண்டியுள்ளது... அதனால்தான் சொன்னேன்" என்று கூறி மறைந்தார்.

மன்னருக்கு இப்போது ஒரு ஆவல் உண்டானது. இறைவரே வலிய இப்படி ஒரு கோயிலுக்கு உறைந்தருளப் போவதாக கூறும்போது அந்த ஆலயத்தை எழுப்பிய அப்பேர்ப்பட்ட பக்தரின் மேன்மை எத்தகையதாய் இருக்குமென வியந்தவனாய் உடனே திருநின்றவூருக்குக் கிளம்பலானார்.

பரிவார சேனைகளோடு புறப்பட்ட அரசர் திருநின்றவூரில் அந்த மகிமை வாய்ந்த கோயிலைத் தரிசிக்க விழைந்தார். ஊருக்குள் சென்றதும் கும்பாபிஷேக குதூகலத்தில் கோயிலை கண்டு பிடிப்பதில் எந்த சிரமும்

இருக்காதென்று நினைத்து வந்த அரசருக்கு பெரும் அலைச்சலே மிஞ்சியது. ஊரெங்கும் தேடியும் கேட்டும் யாருக்கும் அப்படி ஒரு கோயில் இருப்பதாகத் தெரியவில்லை.

'அடடா! கனவை நிஜமென்று நினைத்து ஏமாந்து விட்டோமோ என்று சற்றே சந்தேகம் அரசருக்கு எழுந்திருக்கலாம், இருந்தாலும் கனவில் வந்த இறைவன் கூறிய அந்த பக்தரின் பெயர் பளிச்சென்று நினைவில் வர அந்த ஊர்க்காரர்களிடம் "பூசலார் என்ற பக்தர் கட்டிய கோயிலைத்தான் தேடிவந்தோம்" என்றார்.

ஊர் மக்கள் உள்ளுக்குள் சிரித்தனர். வந்திருக்கும் அரசரை ஒருவிதமாகப் பார்த்தனர்.

"அரசே நீங்கள் குறிப்பிடும் பூசலார் என்ற பெயரில் ஒரு ஏழை அந்தணர் ஒருவர்தான் உள்ளார். அவர் ஒரு சிவபக்தரேயன்றி செல்வந்தரல்ல.... அவர் கோயில் கட்ட வாய்ப்பேயில்லை... அப்படி எந்தக் கோயிலும் இங்கே கட்டப்பட்டுமில்லை" என்றனர்.

இருந்தாலும் தெய்வமே கனவில் வந்து சொன்னதை முழுமையாக நம்பிய அரசன் அத்தெய்வத்தின் வாக்கில் ஏதோ சூட்சமம் இருக்கும் என்று பூசலாரின் இருப்பிடத்தை அவர்களிடம் கேட்டார்.

ஊர் மக்கள் தாங்களே போய் அந்த அந்தணரை அழைத்து வருவதாக கூற மன்னன் மறுத்து தானே பூசலாரை நாடிச் சென்றான்.

பூசலாரைக் கண்டதும் அவரைத் தொழும்படியாக நாயன்மாரின் தேஜஸ் ஜொலித்தது. இப்படி திடுதிப்பென்று அரசன் வந்து நிற்பதே பூசலாருக்கு படபடப்பை உண்டாக்கி யிருக்க தான் கண்ட கனவைப் பற்றி அரசன் சொல்லச் சொல்ல அவர் மெய்சிலிர்த்து ஆனந்தக் கண்ணீர் சிந்தினார்.

"ஈசா என்னே உன் கருணை இந்த எளியோனையும் ஒரு பொருட்டாக கருதி நான் மானசீகமாக எழுப்பிய



கோயிலையே அங்கீகரித்தருளும் உன் அபார கருணைக்கு நான் எப்படி அருகதையானேன்" என்று உருகினார்.

"என்னே இந்த மெய்யான சிவனடியாரின் பெருமை" என்று அரசரும் நெகிழ்ந்துபோய் அந்த நாயன்மாரை வணங்கி தன் நகருக்குத் திரும்பிச் சென்றார்.

அந்த நாயன்மாருக்கு அப்போது இறைவனின் கருணைப் பெருக்கை நினைக்க நினைக்க நன்றிப் பெருக்கெடுத்தது. ஈசன்பால் நன்றிக்கடன் பட்டவராக அவர் உருகியிருக்க வேண்டும்.

"இப்படி மனதளவில் கட்டிய கோயிலுக்கே உன் பெருங்கருணை பொழிவை அனுபவித்து ஆனந்திக்கிறேனே... இப்பேர்ப்பட்ட ஆனந்த மூர்த்திக்கு மெய்யாகவே ஒரு கோயிலை எழுப்பிட இந்த ஜன்மத்தில் என்னால் இயலாமல் போய்விட்டதே... உன் காருண்யத்திற்கு நன்றிக்கடன் பட்டவனாய் என் மனம் உருகுகின்றது. உனக்கு பிரதிபலனாக நான் அப்படி ஒரு கோயிலைக் கட்ட வேண்டுமென்ற ஆதங்கத்தோடு காலத்தை கடத்துகிறேன்... எனக்கொரு அடுத்த ஜன்மத்தை அருள நீ மனம் கொண்டிருந்தால் அந்த ஜன்மத்திலும் இந்த நன்றி மறவாத உணர்வை அளித்து அந்தப் பிறவியிலாவது உனக்கென ஒரு உண்மையான கோயிலைக் கட்டி அர்ப்பணிக்கும் பாக்யத்தை அருள வேண்டும்."

இப்படிப்பட்டதோர் ஏக்கத்தோடு அம்பலவாணரின் பொன்னடி சேர்ந்த பூசலாருக்கு மறு ஜன்மம் என்பது இருக்க வாய்பில்லைதான். ஆனால் அவருடைய அந்த ஆதங்கமும், ஏக்கமும் பிரதோஷ சிவன்மாரின் சிந்தனையில் ஒரு மறுஜன்மம் எடுத்துவிட்டது போலிருந்தது.

இரண்டு ஒற்றுமைகளால் இப்படி எழுதும்படியாகிறது.

முதல் ஒற்றுமை இந்த இருவரின் ஏக்கமும் ஈசனுக்கு கோயில் எழுப்ப வேண்டுமென்பதே. அப்போது ஒரு

மெய்யான கோயில் கட்ட இயலவில்லையே என்று பூசலார் நாயனார் ஏங்கியது போலவே பிரதோஷ சிவன்நாயன்மாரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளுக்காக ஒரு பெரும் கற்கோயிலை உருவாக்கும் நன்றிக்கடன் பட்டவராய் சதா சர்வ காலமும் மனம் வருந்தினார்.

இன்னொரு ஒற்றுமைதான் மகத்தானது.

பூசலார் நாயன்மாரின் ஜன்ம புனித தினம் ஐப்பசி அனுஷமாகும்... அதே ஐப்பசியின் ரேவதி திருநட்சத்திரம்தான் பிரதோஷ சிவ நாயன்மாரின் ஜன்மதினம்.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் ஜன்ம நட்சத்திரமும் பூசலாரின் ஜன்ம நட்சத்திரமும் ஒத்திருக்க ஈசனுக்கு கோயில் கட்ட வேண்டுமென்ற பூசலாரின் ஒத்த சிந்தனையோடு பிறவி எடுத்த பிரதோஷ சிவன்நாயன்மாரின் பிறவியும் ஐப்பசி நல் மாதமாக இருவருக்கும் அமைந்த விசேஷ ஒற்றுமையைக் காட்டுகிறது.

'இவரன்றோ நாயன்மார்' என்று நம்முள் சிலிர்ப்பூட்டுகிறது.

இந்த நூலை (எழுதும்போது வந்த அந்த வார) ஆன்மிக மலரின் ஒன்றில் படித்த கீழ்க்கண்ட விஷயம் நாள் கூறிய மேற்கண்ட ஒப்பீட்டிற்கு ஒரு பலத்தைச் சேர்ப்பதாக காணப்படுகிறது (தினமலர் ஆன்மிக மலர் அக்டோபர் 7, 2017)

**ஆழ்வார்களில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவருமே ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அவதரித்த திரு நட்சத்திரங்கள் ஐப்பசியில் வருவது சிறப்பு. பொய்கையாழ்வார் திருவோணத்திலும், பூதத்தாழ்வார் அவிட்டத்திலும், பேயாழ்வார் சதயத்திலும் அவதரித்தனர். ஒருவரை ஒருவர் அறியாதவர்களான இவர்களை ஒன்று சேர்க்க திருமால் விருப்பம் கொண்டார். திருக்கோவிலூர் எனும் திவ்யதேசத்திற்கு யாத்திரையாக மூவரும் தனித்தனியே**



**வந்திருந்தனர். அன்றிரவில் ஒரு வீட்டின் திண்ணையில் மூவரும் தங்க நேர்ந்தது. அப்போது திருமால் அவர்களுக்கு காட்சி அளிக்க பக்தியில் திளைத்த மூவரும் திருமால் மீது 100 பாடல்களைப் பாடினர்.**

இந்த சங்கதியை படிக்க நேர்ந்தபோது ஐப்பசியில் பிறந்த ஒற்றுமைக்காக திருமாலின் மனம் அந்த மூன்று ஆழ்வார்களையும் ஒன்று சேர்க்க விழைந்ததுபோல் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளெனும் ஈஸ்வரரும் ஒத்த மனம் கொண்ட பூசலார் நாயன்மாரையும் பிரதோஷ நாயன்மாரையும் அதே ஐப்பசியில் அவதரிக்கச் செய்து இந்த நாயன்மாரின் விசேஷ மேன்மையை உலகோர் அறிய வெளிப்படுத்தியருளியுள்ளது போல் தோன்றுகிறது.

இப்படி பிரதோஷ சிவநாயன்மாரின் அவதார தினமே 'இவரன்றோ நாயன்மார்' என்று நினைக்க வைக்கும் விசேஷமுடையதாய் அமைந்துவிட்டது.

❖ ❖ ❖

## 2. 'பிரதோஷம்' அருளிய நாயன்மார்!

**பி**ரதோஷம் என்ற அடைமொழிச் சிறப்பை இந்த நாயன்மார் பெறும்வகையில் ஈசராம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் பெருங்கருணை எப்படியெல்லாம் ஆட்கொண்டுள்ளது என்பதை அறியும்போது நமக்கு மெய்சிலிர்க்கிறது.

எல்லா நாயன்மார்களுக்கும் சோதனை என்பதே அவர்களுடைய லௌகீக சுகமாக அமைந்திருப்பதை காண்கிறோம். ஏதோ ஒரு குறிக்கோளை வைராக்ய சிந்தனை யோடு குரங்குப்பிடியாக பற்றிக் கொண்டு ஒவ்வொரு நாயன்மாரும் அந்தந்த குறிக்கோளை கைவிடாமல் தொடர்வதில் பல இன்னல்களை கடக்க வேண்டி யிருந்துள்ளது.

அதீதம், அர்த்தமற்றது, பேதமை, மூடம், முரடு, சித்த கலக்கம் என்றெல்லாம் மற்ற பக்தர்களின் அபிப்ராயமாக நாயன்மார்களின் பக்தி ஏளனம் செய்யத்தான் வைத்துள்ளது.

ஆனால் சித்தத்தை சிவனிடமே வைத்த அந்த சிவனடியார்களின் சிந்தை அந்த சிவனுக்கு மட்டுமே அந்த பக்தியின் அடிநாதமான அன்பை அறிய வைத்திருக்கும்.

எப்போதும் எமை மறவாத நிலை என்பதையே ஈசன் தன் சிவனடியார் என்பதற்கான இலக்கணமாக வகுத்துள்ளான். அந்த மறவாத நிலைக்காக ஒரு நாயன்மார் கடைப்பிடித்தொழுகும் எவ்வகை பக்தியையும் ஈஸ்வரரின் கருணை ஏற்றுள்ளது.



சாக்கிய நாயன்மார் பௌத்த மதத்திலிருந்து அகன்று வந்து சிவ நெறியே சிறந்தது என்று தீர்மானம் பெற்றவர். எந்நிலை, என்ன கோலம் கொண்டாலும் சிவபிரான் திருவடிகளை மறவாதிருத்தல் ஒன்றே லட்சியமாக்கிக் கொள்ள வேண்டுமென்று கருதியதால் தன் முந்தைய பௌத்தமத கோலத்தை கலைத்து விடாமல் அந்த சாக்கியர் கோலத்திலேயே தீவிர சிவபக்தி செய்தார்.

'நாள்தோறும் ஒரு சிவலிங்கத்தைக் கண்டு வழிபட்ட பின்னரே உணவருந்தல் வேண்டும்' என்று சங்கல்பம் கொண்டவராய் ஒரு நாள் ஒரு வெளியிடத்தில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டார். கண்டதும் மனம் மகிழ்ந்து உடனே சிவார்ச்சனை செய்ய ஆவலுற்றார். அக்கம்பக்கம் பூக்கள் ஏதேனும் கிடைக்கிறதாவென தேடிப்பார்த்தார். வெட்ட வெளியில் எந்த பூச்செடியையும் காண முடியவில்லை.

ஆனாலும் தான் கண்ட சிவலிங்கத்திற்கு அர்ச்சனை செய்யாமல் அகல அவரது வைராக்யம் இடமளிக்கவில்லை. அந்த வெட்டவெளியில் கிடந்த கற்களைப் பார்த்தார். அவைகளையே பூக்களாகப் பாவித்தார். அக் கற்களை சிவலிங்கத்தின் மேல் வீசி அர்ச்சித்தார். இப்படி கல்லெறிகிறோமே என்ற சிந்தையே இல்லாமல் அதையும் மீறிய அவரது பக்தி வைராக்யம் ஒன்றே அந்த கற்களை மலர்களாக்கி விட்டன. அதனால் கோலமும், நிலையும் எப்படியிருந்தாலும் குறிக்கோள் புனிதமாயிருப்பதையே ஈசனின் மனம் ஏற்றுக் கொள்கிறது.

இப்படி அறுபத்து மூவருக்கும் வெவ்வேறான வைராக்ய பக்தி மார்க்கங்களை ஆக்கிச் அருள்செய்துள்ள சர்வேசன் இந்த நந்தீஸ்வர அடியவருக்கு ஒரு பொருத்தமான மார்க்கத்தைக் காட்ட விழைந்தார்.

ருத்ரமூர்த்தியோ என்று அச்சப்படும் பக்தர்களுக்கும் சாந்தமூர்த்தியாய் ஈசன் அருள்புரியும் காலம், ஈசனால் ரக்ஷிக்கப்படும் காலம்தான் சாயரட்சை காலம். இவ்வேளைக்கு

அதி தேவதை சூரியபகவானின் மனைவி பிரத்யுஷா. அதனால் இந்தக் காலத்துக்கு பிரதியுஷத்காலம் என்று பெயர். அதுவே பிரதோஷகாலம் என்று பேச்சு வழக்கில் மருவியுள்ளது.

இதன் விசேஷமென்ன?

நந்தியம் பெருமானுக்கும் சந்தியா காலத்துக்கும் என்ன சம்பந்தம்?

விடமுண்ட கண்டனான சிவன் பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது பொங்கி வந்த விஷத்தை தன் கண்டத்தில் வைத்து காக்கும் கடவுள். அப்படி விஷத்தை உண்ட மயக்கத்திலிருந்து ஈசன் மீண்டு வந்த நேரம் சந்தியா நேரம். தேவ அசுரர்களை காத்து ரக்ஷித்துவிட்ட களிப்போடு களைப்பு நீங்கியவராய் சந்தியா தாண்டவம் புரிகிறார்.

முதலில் நடந்த இந்தத் தாண்டவத்திற்கு எந்த தேவரும் இசைக்கருவிகளை வாசிக்கவில்லையாம். நந்திதேவர் மட்டுமே நடன தாளலயத்திற்கு சுத்த மத்தளத்தை வாசித்தாராம்.

இந்த ஆனந்தக் கூத்தே பேரானந்த நிலைதரும் என்பதை உணராத தேவர்கள் பாற்கடலை கடைந்து அதில் கிடைக்கும் அமிர்தமே ஆனந்தம் என்ற பேதமையால் ஆட்பட்டு அங்கிருந்து அகன்று விட்டனராம்.

ஆனால் மரணமிலா பெருவாழ்வு தரவல்ல இந்த ஆனந்தக் கூத்தின் மேன்மையை நந்திகேஸ்வரர் மட்டுமே பூர்ணமாக உணர்ந்து அனுபவித்ததன் பலனாக யுக முடிவில் நந்திதேவர் சிவபெருமானால் அணைத்துக் கொள்ளப் பெற்றவராய் அழியாது அருளும் பாக்யமடைந்தார்.

அதே பரமசிவமாய் அவதரித்துள்ள ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா அந்த நந்திதேவரின் அவதாரமாய் திகழும் நாயன்மாருக்கும் அதே பாங்கோடு அனுக்ரஹம் செய்து முடிவில் தன்னுடன் அணைத்து, இணைத்து அழியாநிலை அருளப்போவதற்கு அடையாளமாக இந்த நாயன்மாருக்கு தன் ஆனந்த நடன பிரதோஷ கால ருசியை உண்டாக்கியுள்ளார்.



மற்ற அறுபத்து மூவரும் ஸ்தூலமாக சிவனை தரிசித்த அவகாசம் ஒரு சிறுதுளி க்ஷணநேரமாகத்தான் இருந்திருக்கக் கூடும். அவர்களின் மனக்கண் சதாசர்வகாலமும் உமாமகேஸ்வரரை கண்டு ஆனந்தித்திருக்கலாமென்றாலும் புறக்கண்ணில் அவர்கள் கண்ட தெய்வம் கல்வடிவான சிவலிங்கங்களே!

ஆனால் இந்த பிரதோஷ சிவநாயனாருக்கோ ஒரு பிரத்யேக அனுக்ரஹமாக சர்வேஸ்வரர் காணக்கிடைக்காத அற்புத மூர்த்தியாய் கையில் தண்டமேந்தி காஷாயம் தரித்த மகானாய் காட்சி அருள வந்துள்ளார்.

சேலத்தில் சுகவனேஸ்வரரின் திருக்கோயிலுக்கு அருகேதான் நாயன்மார் பூர்வாஸ்ரமத்தில் ரயில் நிலைய அதிகாரியாக பணிபுரிந்து வந்தார்.

சொர்ணாம்பிகை சமேத சுகவனேஸ்வரராய் பிரதோஷம் தோறும் காட்சியருள அத் தெய்வம் காத்திருக்கும். பக்தர்களின் கூட்டம் குவியும். ஆனால் ஒரு பக்தருக்கு மட்டும் கூப்பிடு தூரத்திலிருந்த இந்தக் கோயிலின் பிரதோஷ தரிசனத்தைவிட காஞ்சியில் அருளும் கருணைவடிவை, ஒரு நிஜமான சிவத்தை தரிசிக்க ஓடுவதே பத்தி ருசிக்கு விருந்தாயிருக்கும்.

நந்திகேஸ்வரரின் அம்சமாகத் தோன்றியுள்ள இந்த நாயன்மாரை பிரதோஷ தரிசனம் என்ற பக்தி மார்க்கத்திலேயே ஆட்கொண்டு அருளுவது பொருத்தமென ஈஸ்வர சிந்தை இருந்திருக்கலாம்.

அதுதான் உண்மை என்பதை உலகோரும் அறிந்திடும் வண்ணம் மஹாபெரியவாளின் திருவாக்கும் அங்கீகரித்தது.

"இவர் பிரதோஷம், பிரதோஷம் வந்திண்டிருக்கார்" என்று காஞ்சி சிவாஸ்தானத்தில் காட்சி தந்த சந்திரசேகர பெரியவா ஒரு முறை சிலாகித்தார்.

அப்படி சிலாகித்து ஒரு தெய்வம் சொல்வதென்றால் அந்த பக்தன் குறைந்தபட்சம் ஒரு வருட காலத்தில் அமையும்

இருபத்தைந்து பிரதோஷத்திற்காவது தவறாமல் வந்திருக்க வேண்டும் அப்படி வருடம் முழுவதிலும் பிரதோஷம் தோறும் தரிசிக்க வந்து நிற்கும் பக்தனை அடையாளம் கண்டு இப்படி குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ளலாம்.

இந்த பக்தரோ அப்படி அடிக்கடி என்று கூட சொல்ல முடியாத மிக மிக குறைந்த பட்சமாக நாம் குறிப்பிடும் ஓரிரண்டு முறையின் கூட்டுத் தொகையான மூன்றே மூன்றாம் முறைதான் தரிசிக்கப் போயிருந்தார்.

ஆனால் அத்தெய்வமோ பிரதோஷ வேளையில் தன்னை எந்த பக்தரும் இவரைப்போல் தரிசிக்க வந்ததில்லையோ என்று சந்தேகத்தை உண்டாக்கிடும் வகையிலும், இவர் என்னவோ எண்ணிக்கைக்கு அடங்காத பிரதோஷங்களுக்கு வந்து தரிசித்து செல்கிறாரோ என்று கைங்கர்ய அன்பர்கள் எண்ணும் வகையிலும் 'இப்படி பிரதோஷம், பிரதோஷம் வந்திண்டிருக்கார்' என்று கடந்த காலத்தைக் குறிப்பிடும் சூட்சமத்தில் அமையப்போகும் எதிர்காலத்தை நாயன்மாருக்கு சுட்டிக்காட்டிவிட்டார்.

'அடடா பெரியவாளுக்கு நாம் இப்படி தொடர்ந்து மூன்று முறையாக பிரதோஷ தரிசனத்துக்கு வருவது தெரியுமா என்று சந்தேகப்பட்டது எத்தனை பேதமை' என்று நினைத்த நாயன்மாரின் மனதில் தெய்வத்தின் திருவாக்கு ஒரு ஸ்திரமான சங்கல்பத்தை உண்டாக்கி அருளிவிட்டது.

இந்த சங்கல்பமே தெய்வ சங்கல்பமாக பிரதோஷம் தோறும் ஸ்ரீமஹா பெரியவாளைத் தரிசித்தே ஆகவேண்டும் என்ற மனஉறுதியை விதைத்துவிட்டது.

ஒரு நாயன்மாருக்கு நித்ய சிவ தரிசனம் இன்னொரு நாயன்மாருக்கு தினம் ஒரு சிவனடியாருக்கு அமுது படைப்பது, மற்றொரு நாயன்மாருக்கு நித்தம் ஒரு சிவனடியாருக்கு வஸ்திரம் தோய்த்துக் கொடுப்பது, வேறொரு நாயன்மாருக்கு கிடைப்பது பொன் மீனாகிலும் அதையும் சிவார்ப்பணமாக கடலில் வீசிடும் உறுதி என்ற வகையில்



இப்போது இந்த நாயன்மாரின் 64ம் பக்திமார்க்கமான இடைவிடாத பிரதோஷ தரிசனம் என்பதும் சேரலானது.

ஆனந்த அனுபவங்களாக பிரதோஷ தரிசனங்கள் நாயன்மாருக்கு அருளப்பட்டன. ஆரம்பகாலத்தில் சேலத்திலிருந்து காஞ்சி வந்து மகானை தரிசிப்பதே கூட கொஞ்சம் சிரமத்தைக் கொடுத்திருக்குமென்பது உண்மை தான். அப்படிப்பட்டதான லௌகீக சிரமங்கள் அமைந்த வாழ்க்கைதான்.

நாயன்மாருக்கோ மிக பொறுப்பான ரயில் நிலைய அதிகாரி உத்யோகம். ஒரு நாள், ஒரு வேளை ஆனாலும் ரயில்நிலைய பணிகளை வேறு யாரிடமாவது ஒப்படைத்து விட்டுத்தான் நகரமுடியும். ரயில்களும், சரக்கு வண்டிகளும் அடிக்கடி வந்து போகும் ரயில் நிலையத்தில் மிக கவனமாக இருந்தாக வேண்டிய கட்டாயமும் அவசியமும் எப்போதுமே உண்டு. கொஞ்சம் தவறானாலும் பெரும் பாதிப்புக்கான முழு பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அதற்கான தண்டனையையும் அடைந்தாக வேண்டும்.

ரயில்வே உத்யோகங்களில் தற்காலிக வேலை இழப்பு (Suspention) என்பது சர்வ சாதாரணமாகக் கிடைக்கும் தண்டனையாக பலரும் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

இப்படி உத்யோக கெடுபிடிகள் ஒருபுறமிருக்க அவரது லௌகீக வாழ்க்கையிலும் சில நிர்பந்தங்கள் இவரை இருக்கு மிடத்தை விட்டு அத்தனை லேசாக விடுபட முடியாமல் ஆக்கியிருந்தது.

தர்ம பத்தினியாம் மாதுஸ்ரீ வேதாம்பாள் ஒரு பதிவிரதாசிரோன்மணி. கணவரை கண் கண்ட தெய்வமாக வணங்கும் உத்தமி. மணாளனின் மனம் அறிந்து அதற்கேற்ப அனுசரித்து அடங்கி நடக்கும் குணவதி.

இந்த தர்மமிகு தம்பதியினருக்கு ஒரு முத்தான மூத்த பெண்ணும், மாதவம் புரிந்ததால் கிடைத்திட்ட மாப்பிள்ளையும் என்று அமைந்துவிட்டதும் இறை அருளே.

லௌகீக வாழ்க்கையில் துணைவியார் பெண், மாப்பிள்ளை என்பதெல்லாம் அமையப் பெற்ற நாயன்மாரின் உறுதியான சங்கல்பத்திற்கு ஏதேனும் ஒரு நெருடல் உண்டாக்கி பார்க்கலாமென சங்கரரின் திருவிளையாடல் மனம் விழைந்ததோ என்னவோ!

இந்த ஜன்மத்தில் எந்த பாவமும், தோஷமும் நெருங்கக்கூட இயலாத மறுபிறவி என்பதே சாத்யமில்லாத ரிஷிகளாய் இரு மகன்களின் பெற்றோர்களாக இத்தம்பதி யினரின் தியாகம் தேவைப்பட்டது.

இயலாத குழந்தைகளை நம்மிடம் இறைவன் தந்தது நம்மால் மட்டுமே அதற்கான தியாகம் செய்யும் மனமுள்ளதாக இறைவன் நினைத்ததன் காரணமே என்று பரஸ்பரம் தம்பதிகள் இதை பெருமையாக இதை சோதனையாக என்றும் கருதியதேயில்லை.

மேலும் இந்த இரண்டு குழந்தைகளையும் ரிஷிகள் என்று தெய்வ வாக்கை ஸ்ரீ மஹாபெரியவா அருளி கிரீஸ் இளவரசியை சென்று பார்த்துவிட்டுவர உத்தரவிட்டதில் அந்த ராணி பிரதோஷ கிரகத்தை இந்த இரு ரிஷிகளின் ஆஸ்ரமமாக கருதி பெரியவாளை தரிசிக்க வரும் போதெல்லாம் இந்த ரிஷிகளும் வந்தனம் சமர்ப்பித்துச் செல்வதுண்டு.

இருந்தாலும் குழந்தைகளின் சகலத்தையும் இந்த தம்பதியினர்தான் கவனித்தாக வேண்டுமென்ற நிலை. வயிற்று வலியோ, தலை வலியோ வேறு என்ன உபாதையோ இரு குழந்தையும் துடிக்கும் போது பெற்ற மனம் கலங்கும். வாய்விட்டு வேதனையை தெரிவிக்க முடியாத நிலையில் எதற்கு வைத்தியம் செய்வது என்பதே அறிய முடியாமல் ஒரு உத்தேசமான சிகிச்சை மருந்தளித்துவிட்டு மீதியை அந்த வைதீஸ்வர பெரியவாளிடம் விட்டுவிடுவதை தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை.

பரம கருணாமூர்த்தியாம் தன் மகிமையால் குழந்தைகள் இப்படி அவஸ்தைப்பட்ட போதெல்லாம் அதிசயமான



முறையில் ஆட்கொண்டுள்ளது சத்தியமென்றாலும் இந்த இரண்டு குழந்தைகளுக்கு ஒருவர் மாற்றி ஒருவருக்கோ இல்லை ஒட்டுமொத்தமாக இருவருக்குமே உடல் உபாதை எப்போது வரும் என்று எதிர்பார்த்து பயந்தபடியே இருப்பதென்பது தம்பதியினரின் அனுபவமாகிவிட்டது.

சொந்த பந்தங்களின் விசேஷங்களில் கலந்து கொண்டு அவர்களின் சந்தோஷ சுகங்களை பகிர்ந்து கொள்ள இயலாத நிலை ஒருபுறமிருந்தாலும் எல்லார் வீட்டு கவலைகளும், துயரங்களும் நாயன்மார் தம்பதிகளிடம் ஸ்ரீமஹாபெரியவாளை வேண்டிக் கொள்ள சொல்ல முறையிடப்பட்டு எல்லாம் தயரங்கள் மட்டும் இவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதுண்டு.

இப்படி உற்றார் உறவுகளைகூட சென்று பார்க்க முடியாத சூழலில் நாயன்மாரின் உறுதி பிரதோஷ தரிசனத்தை மட்டும் விட்டுக் கொடுக்க நினைத்து கூட இல்லை.

ஒரு சாமான்ய மனம் கொண்டவராய் இருந்தாலும் எத்தனை பக்திமானாய் இருந்தாலும் இந்த மேற்கண்ட காரணத்தை ஒரு சாக்காக வைத்து சங்கல்பத்தை விட்டு விடுவதுதான் இயல்பு. அதுதான் இயற்கை ‘சாமி கோவிச்சுக்கவா போறார்’ என்று சமாதானம் செய்து கொள்வது நியாயமாகவே கூட.

ஆனால் இந்த சாமியோ அப்படி கோபித்துக் கொள்ளும் சாமியல்ல. மாறாக இத்தனை நிர்பந்தங்களிடையே இந்த பக்தர் வரவேண்டி இருக்கிறதே சிவனே என்று காஞ்சியிலேயே கிடக்கலாம் பக்தரையும் சேலத்திலிருந்து சென்னைக்கு வரும்படி செய்து விடலாமென்று கருணையை பொழிந்த தெய்வம்.

இப்படி பிரதோஷம் தோறும் சங்கரரும் நாயன்மாரும் பசுவும் கன்றுமான ஈர்ப்போடு பரஸ்பரம் எப்போது தரிசிப்போம் என்று பக்தன் ஏங்குவது போலவே ‘எப்போது பக்தர் வருவார்’ என்று பசுபதியே காத்து நிற்கும் முற்றிலும் மாறுபட்டதோர் அபூர்வமாக மாறியிருந்தது.

ஒரு சனி பிரதோஷத்திற்கு சென்னையிலிருந்து பெல்காம் சென்றாக வேண்டும். நாயன்மாருக்கு சோதனை காத்திருந்தது. ஒரு கெடுபிடியான ஆபிஸர் வேண்டுமென்றே இவரை அந்த நாளில் ஒரு இன்ஸ்பெக்ஷனுக்கு கட்டாயம் வந்தாக வேண்டுமென்று கூறிவிட்டார்.

பிரதோஷ தரிசனம் தடைப்படும் வகையில் அமைந்த இந்த உத்யோக சிக்கலால் இவர் மனம் களங்கினார். ஏதோ பக்கத்திலென்றால் ஒரு நாளில் போய்வந்து விடலாம். சோதனையாக ஈஸ்வரர் இவர் சென்னைக்கு மாற்றலாகி வந்த சில மாதங்களில் 'எங்கே போகிறாய் என சொல்லாமல் எங்கோ போகிறாய் சங்கர சிவா' என்று கவி கிருட்டிணமூர்த்தி உருகி பாடியதுபோல் வடக்கே எங்கெங்கோ போய்க் கொண்டே இருந்தார்.

அப்படி சில சஞ்சாரம் ஆந்திரா, கர்நாடகா, மஹாராஷ்டிரா என்று அந்த தொண்ணூறு வயது வயோதிகத்தையும் கருதாமல் காடு மேடென திருபாதங்கள் நோக சென்று கொண்டே இருக்க இந்த நாயன்மாரும் உத்யோக கெடுபிடியில் பயணத்துக்கு மூன்று நாளும் பிரதோஷ தரிசனத்திற்கு ஒரு முழு நாளும் குறைந்த பட்சம் தேவைப்படும் காலகட்டங்களில் மாதம் இரு முறை வரும் பிரதோஷத்திற்கு ஒவ்வொரு முறையும் 3, 4 நாட்களென மாதத்தில் எட்டு நாட்கள் உத்யோக பந்தத்திலிருந்து விடுபடவேண்டியிருந்தது.

நாயன்மாரின் மனமோ இந்த உத்யோக பந்தங்களை முற்றிலும் துணிந்து துறந்துவிடும் பக்குவத்தில்தான் இருந்தது.

ஆனால் துணைவியும், துறவிகளையொத்த இரு பிள்ளைகளும் காப்பற்ற வேண்டிய தர்மம் இதைத் தடுத்தது.

அப்படியும் இந்த ஒரே ஒரு முறை வந்த இந்த தடையை அவர் மிக வேதனையோடு ஏற்றுக்கொண்டு கவனம் முழுவதையும் பிரதோஷத்தன்று மகாபிரபுவை தரிசனம் செய்வதுபோல் மனதுள் சதாசர்வ காலமும் இருத்தி வழிபட்டுக் கொண்டிருந்தார்.



இங்கே பக்தன் இப்படி ஒரு வேதனையிலிருந்த அதே சமயம் வேண்டுதல் வேண்டாமை இலானின் தெய்வமனம் எப்படி தவித்ததென்பது பிறகு தெரிந்தது.

அடுத்த பிரதோஷம் பெல்காம் என்ற இடத்தில் மஹாபெரியவா அருள் செய்த முகாமாயிருந்தது. நாயன்மார் இப்படி ஒரே ஒரு பிரதோஷம் நழுவிப் போனதை எண்ணி எண்ணி ஒரு குற்ற உணர்ச்சியோடு வெதும்பிக் கொண்டே இந்த பிரதோஷம் அருளப்பட்டதற்கு நன்றி சொல்லியபடி கிளம்பினார்.

ஸ்ரீ மஹாபெரியவாளெனும் பரமேஸ்வரர் எங்கு சென்றாலும் பக்தர்களின் கூட்டம் குறையாது, தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். தமிழ்நாட்டு பக்தர்களையும் வட தேசத்து பக்தர்களையும் கைங்கர்யம் செய்யும் அன்பர்கள் கட்டுப்படுத்த இயலாமல் தவிப்பதுண்டு.

இந்நிலையில் நாயன்மார் நழுவவிட்ட அந்த பிரதோஷம் சனிபிரதோஷமாயிருந்ததால் அதன் விசேஷத்துக்காகவும், சனி, ஞாயிறு என்ற விடுமுறை சௌகரியமாக இருந்தாலும் அன்று பெரியவா அருளிய இடத்திற்கு பக்தர்கள் குவிந்து வந்திருப்பது உறுதி.

அப்படியிருக்க இங்கே நாயன்மார் கலங்கிக் கொண்டிருந்தபோது அங்கே காருண்யதெய்வம் எப்படி இந்த தருணங்களில் தன்னை காட்டிக் கொண்டது என்பதை அங்கிருந்த கைங்கரிய அன்பர் (பூர்வாஸ்ரமத்தில் ஸ்ரீகண்டன்) நாயன்மாரிடம் கூறினாராம்.

"என்ன மாமா இப்படி பண்ணிட்டேளே" என்று படபடப்போடு ஸ்ரீகண்டன் வந்து நின்ற நாயன்மாரிடம் எதையோ சொல்வதற்கு ஆரம்பித்தார். என்னவோ ஏதோ என்று நாயன்மாருக்கும் பதட்டமானது.

"போன பிரதோஷம் நீர் வராம போயிட்டீர். பெரியவா பிரதோஷ பூஜையை முடிச்சுட்டு பசுமாடு கன்னுகுட்டியை தேடறா மாதிரி வெளியே வந்து வந்து தேடிட்டுப் போனா" என்றார்.

**இதென்ன கூத்து?**

**இது கூத்தபிரானின் திருவிளையாடலல்லவா!**

தெய்வ தரிசனத்திற்கு பக்தர்கள் ஏங்குவதுதான் இயற்கை... அப்படியிருக்க தெய்வமே ஒரு பக்தன் வரவில்லை என்பதற்காக ஏங்கித் தவிப்பதாவது!

ஆனாலும் இந்த இயற்கைக்கு மாறான நிகழ்விற்கு என்ன உட்பொருள் இருக்கக்கூடும். தெய்வம் நினைத்திருந்தால் நாயன்மாரின் தடைகளை க்ஷணநேரம் தகர்த்து தரிசனத்துக்கு அருளியிருக்கலாமே

ஒரு பக்தனின் 'ஜன்மாவே வேண்டாம்' என்ற மிக அரிதான கோரிக்கையையே சூட்சமமானதோர் அருளால் அகற்றி அனுக்ரஹம் செய்த தெய்மல்லவா நம் பெரியவா

எங்கேயோ இருந்த ஒரு பக்தருக்கு அவருடைய அந்திமகால சடங்குக்குத் தேவைப்படும். பணத்தை தந்தி மணியாடரில் அனுப்பி வைக்கும் சர்வக்ஞனல்லவா நம் மஹா பெரியவா.

அவாளுக்கு தெரியாததில்லே முடியாததில்லை என்று நாயன்மாரின் திட சிந்தனைக்கும் தெரிந்ததே.

அப்படியிருக்க பக்தருக்கு சகலசௌகர்யத்துடன் பிரதோஷம் தோறும் தரிசனம் நல்கிட அனுக்ரஹம் செய்விப்பதென்பது இந்த ஈஸ்வர சக்திக்கு மிக எளிதான ஒன்று

சர்வ வல்லமையையும் மறைப்பதற்கு மட்டுமே சதாசர்வகாலமும் சிரமப்பட்டுக் கொண்டுதான் சாக்ஷாத் தெய்வம் என்பதை துளிக்கூட காட்டிவிடாமல் சர்வ ஜாக்கிரதையோடு அந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி போல உலக வாழ்க்கை நியதிகளை மீறாமல் இந்த மானுடப் பிறவியின் வரையறைகளுக்கு உட்பட்ட சக்திகளை மட்டும் கையாண்டு வாழ்ந்து காட்டிய தெய்வமல்லவா நம் பெரியவா!

ஆனாலும் ஒரு துறவுக் கோலத்தில் விருப்பு, வெறுப்பு என்பதை கடந்த மகானாக இல்லாமல் அது ஏன் இந்த



நாயன்மாரை மட்டும் தேடுவதுபோல் ஒரு பிரத்யேக கவனத்தைக் காட்டும் விளையாட்டு!

அங்கேதான் பக்தரின் விசேஷம் வெளிப்படுகிறது.

வந்து போகும் அத்தனை பக்தர்களுக்குள்ளே ஒரு நாயன்மாரின் சிரத்தையோடு கூடிய பக்தரின் விசேஷம் வெளிப்பட்டாக வேண்டுமே என்று அந்த தாயன்பனின் கருணை கட்டுக்கடங்காமல் பொங்கியுள்ளது.

இப்படி ஒரு திருநாடகத்தை நடத்தி தளராத உறுதியுடன் பிரதோஷ தரிசனத்தை தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கும் ஒரு பக்தரின் பக்திநேர்த்தியை உலகறியச் செய்யும் யுக்தியல்லவா இது.

ஒவ்வொரு நாயன்மாருக்கும் ஒவ்வொரு பக்தி நெறி இருந்ததுபோல் இந்த பக்தருக்கும் இப்படி ஒரு பிரதோஷ தரிசனம் தவறாமை என்ற பக்திநெறியை தெய்வமே வகுத்துக் கொடுத்ததோடல்லாமல் இப்படி பக்தர் தவறவிட்ட பிரதோஷ தினத்தில் தானே அவரைத் தேடுவதாக வெளிப்படையாக காட்டிக் கொண்டதிலிருந்து இந்த பக்திநெறி வழுவாமல் காக்கப்படுகிறதா என்பதை தானும் கண்காணித்துக் கொண்டிருப்பதையல்லவா தெய்வம் உணர்த்தியுள்ளது.

அறுபத்து மூவரில் ஒரு நாயன்மாருக்கு தினம் ஒரு சிவனடியாரின் வஸ்திரத்தை தோய்த்துக் கொடுப்பதென்ற பக்தி நெறி இருந்தது. ஒரு நாள் தெய்வம் சோதிக்க நினைத்து தானே ஒரு சிவனடியாராக தோன்றி தன் வஸ்திரத்தை அந்த நாயன்மாரிடம் துவைக்கும்படி விளையாடல் புரிந்தது. கொடுத்த வஸ்திரம் கிழிந்துவிடும்படி சோதனை செய்து அதன்பின் அந்த நாயன்மாருக்கு காட்சி தந்து இறைவன் அருள்புரிந்தார்.

ஆனால் இந்த 64ம் நாயன்மாரின் விஷயத்தில் இப்படி ஒரு தடங்கலால் சோதனை செய்த அத்தெய்வம் தாமும் இதனால் வேதனையுற்றதாக காட்டிக் கொண்டதில் இந்த நாயன்மாருள் இருந்த நந்திகேஸ்வரரையும் நாயகரான மஹா

பெரியவாளுள் இருக்கும் ஆனந்த நடராஜ மூர்த்தியையும் சூட்சமமாக உணர முடிகிறதல்லவா.

**அன்று பரமேஸ்வரர் விடம் உண்ட களைப்பிலிருந்து எழுந்து அந்த சந்தியா காலத்தில் தாண்டவமாடியபோது அங்கே உமாதேவி தரிசித்து நிற்க நந்தியம் பெருமாள் மட்டுமே மத்தளம் வாசித்ததாகக் கண்டோம்,**

**அதனால்தானோ என்னவோ இந்த நடமாடும் நடராஜ தெய்வம் பிரதோஷ காலத்தில் நந்திதேவரான நாயன்மாரை மட்டுமே தேடுகிறார் போலும்.**

**இவரன்றோ நாயன்மார்!**

இன்னொரு பிரதோஷ தினம். நாயன்மார் ஹார்ட் அட்டாக்கினால் பாதிக்கப்பட்டு வைதீஸ்வர பெரியவர் அனுக்ரஹத்தால் உயிர்பிழைத்திட்ட நிலையில் சென்னையில் ஒருவர் வீட்டில் ஓய்வெடுக்கத் தங்கியிருந்தார்.

நாயன்மார் காஞ்சியில் குடிபுகுந்து காஞ்சிமகான் அங்கேயே அருள்பாலிக்க வந்துவிட்ட காலம் அது.

வைத்தியத்துக்காக ஸ்ரீமஹாபெரியவாளே நாயன்மாரை அனுக்ரஹித்து அனுப்பியிருந்தார். மருத்துவர்களும் ஓய்வாக இருந்தாக வேண்டும் என்பதற்காக காஞ்சிபுரத்திற்கு கார் பயணமாக வீடு திரும்புவதையும் தவிர்க்கும்படி சொல்லியிருந்தனர்.

திரு இந்திராபவன் நாராயண ஐயர் என்ற அன்பர் தன் அன்பு கட்டளையோடு திருவல்லிக்கேணியிலிருந்த தன் இல்லத்தில் நாயன்மாரை பராமரித்து கவனித்து வந்தார்.

அப்போது ஒரு தர்மசங்கடம் இவருக்கு நேர்ந்தது.

இடையில் வந்தது ஒரு பிரதோஷ தினம்! அன்று நாராயண ஐயர் ஸ்ரீபெரியவா தரிசனத்திற்கு போகவேண்டும். வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் பிரதோஷ பக்தரிடம்



இதை அறிவித்தால் சங்கடம் நேரும். டாக்டரின் உத்தரவை யெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு புறப்பட்டுவிடுவார் இந்த நாயன்மார். அவர் உடல்நிலை பாதிக்கப்பட்டால் அதற்கு பதில் சொல்லியாக வேண்டும். அதனால் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு போய்விடுவதே உத்தமம் என்றெல்லாம் எண்ணிக் கொண்டார்.

திரு நாராயண ஐயருக்கு இது நியாயமானதாகத் தான் தோன்றியது. யாராயிருந்தாலும் இதைத்தான் செய்திருப்பர்.

அன்று இன்னொரு சோதனை பேரூந்து ஒன்றும் ஓடவில்லை. இவர் காரில்தான் புறப்பட்டுப் போனார். வீட்டில் இவருடைய குடும்பத்தாரிடம் நாயன்மாரை கவனமாக கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுத்தான் அகன்றார்.

பலகீனமான இதயத்துடன் சிகிச்சையின் தாக்கம் அகலாத அயர்ச்சியுடன் அப்போது நாயன்மார் உறங்கிக் கொண்டிருந்தது நாராயண ஐயருக்கு சாதகமாக அமைந்தது.

அங்கே காஞ்சியில் பிரதோஷ நாயன்மார் வருகைக்காகவே காத்திருப்பவராக தன்னை ஸ்ரீ மஹாபெரியவா காட்டிக் கொள்வதுபோல் நாராயணன் தரிசிக்க வந்து நின்றபோது,

“எங்கே அவர் வரலையா?” என்று நாயன்மாரை எதிர்பார்த்து நிற்பவராக கேட்க நாராயணன் சொல்வதறியாமல் திகைத்து நின்றார்.

இந்த வைத்தியநாதரல்லவோ ஆசிர்வதித்து நாயன்மாரை சென்னை சென்று சிகிச்சை பெற அனுப்பி வைத்தவர்? அப்படியிருக்க மோசமான உடல் நிலையில் ஓய்வாக படுத்திருக்கும் பக்தரை எப்படி பிரதோஷத்தன்று ‘அவர் வரலையா’ என்று கேட்க முடியும்.

தெய்வத்திற்கு தெரியாததா? இது என்ன விளையாட்டு? இந்த திருவிளையாடலில் நாம் பழி ஏற்கும் நிலை

ஏற்பட்டுவிடும் போலானதே. இப்படி தெய்வத்தின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறேன்?

இப்படி செய்வதறியாமல், பதில் சொல்வதறியாமல் நாராயணன் கொஞ்சம் தயங்கிபின் மெல்ல

“பெரியவா! அவருக்கு இன்னும் பூர்ணமாக குணமாகலே. அதனாலே நான் கூட்டிண்டு வரமுடியலே.”

இதைக் கேட்டதும் மஹாபெரியவா சமாதானமடைந்து விடுவாரென்று நாராயணன் நம்பியது நடக்கவில்லை.

ராமபாணம் போல ஸ்ரீ மஹாபெரியவாளின் கேள்வி நாராயணனைத் தாக்கியது.

“அப்போ நீ ஏன் வந்தே?”

தெய்வத்திடமிருந்து இப்படி ஒரு கடுமையான கேள்வியை எதிர்ப்பார்க்காததால் நாராயணன் கலங்கி விட்டார். தான் தவறு செய்துவிட்டோமோ அப்படி நாயன்மாரிடம் சொல்லாமல் வந்ததுதான் அந்த தவறோ என்று பல்வேறு சிந்தனையுடன் பிரதோஷ சிவநாயன்மாரை எப்படியாவது யார் துணையோடாவது காஞ்சிக்கு அழைத்துவரும்படி சொல்ல தன் வீட்டு நம்பருக்கு போன் செய்தார்.

ஆனால் அங்கோ நாயன்மாரில்லை என்ற தகவல்தான் வந்தது.

தன்னை அழைக்காமல் நாராயணன் சென்றுவிட்டதை அறிந்த நாயன்மாருக்கு அடடா என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாரே என்று பெரும் ஏக்கமுற்றார்.

பிரதோஷ தரிசனம் தவறக்கூடாதே என்ற அவருக்கிருந்த மனஉறுதி இதயகோளாறையெல்லாம் பொருட்படுத்தாமல் காஞ்சி செல்ல துணிந்து செயல் பட்டது.

பாலாஜி என்ற அன்பரிடம் போனில் தன் ஆதங்கத்தை தெரிவித்தார். நாயன்மார்கேட்டதை என்றும் தட்டாத சீடராய் பாலாஜி உடனே ஒரு காரை ஏற்பாடு செய்து நாயன்மாரை அழைத்துக் கொண்டு கிளம்பியாயிற்று



இந்த தகவலை நாராயணன் வீட்டார் அவரிடம் தெரிவிக்க இவருக்கு பதட்டம் தெளிந்திருந்தது. மஹா பெரியவாளிடம் திரும்பச் சென்று நாயன்மார் வந்து கொண்டிருப்பதைத் தெரிவித்தார்.

எல்லாமும் அறிந்த ஈஸ்வரராம் ஸ்ரீபெரியவா இதை தெரியாதவர்போல் கேட்டுக் கொண்டார். அதன்பிறகும் தன் தயாசிந்தையை காட்டுவதுபோல் அவர் வந்துட்டாரா? அவர் வந்துட்டாரா? என்று 15 நிமிடங்களுக்கு ஒரு முறை கேட்டுக் கொண்டே இருந்தார்.

பெரியவாளின் இப்படிப்பட்ட விசாரிப்பு அங்கிருந்த அனைவருக்குமே வியப்பளித்தது.

சுமார் எட்டுமணி இரவில் நாயன்மார் எனும் கன்று பசுபதியாம் மஹாபெரியவாளெனும் பசுவைத் தேடி வந்து நின்றாயிற்று

அப்போதும் திருவிளையாட்டை மஹாபெரியவா தொடர்ந்தார். நாராயணனைப் பார்த்து,

“வரமாட்டார்னு சொன்னாயே இதோ வந்துட்டாரே” என்று ஒரு குதூகலத்துடன் பக்த நாயன்மாரை பார்த்துவிட்ட பரவசத்தை அந்த தெய்வம் வெளிப்படுத்திய விதம் அதிசயமாயிருந்தது.

இதேபோல் பண்டரிபூரில் ஒரு பிரதோஷத்திற்கு சற்று தாமதமாகச் செல்ல நேர்ந்ததில் அங்கே போனவுடன் மேட்டூர் சுவாமிகள்,

“நல்ல வேளையா வந்து சேர்ந்தீங்க... பெரியவா காலையிலேர்ந்தே உங்களை வந்தாச்சா... வந்தாச்சான்னு கேட்டுண்டே இருந்தார்” என்ற கூறியதைக் கேட்ட நாயன்மார் என்ன தவம் செய்தோமோ என்று உருகியிருக்க வேண்டும்.

தெய்வங்கள் அடியார்களை சோதனை செய்வதைத்தான் படித்திருக்கிறோம். கடைப்பிடிக்கும் தன் பக்தி தர்மத்தை எந்த தடை வந்திட்டாலும் தளராமல் அந்த பக்தன் விடாமலிருக்கிறானா என்பதை சோதிக்க தெய்வம் ஒரு

நாயன்மாரிடம் பிள்ளைக் கறியையே கேட்டு வந்த அதீதத்தை படித்துள்ளோம். இந்த நாயன்மாரோ தன் பிள்ளையின் உயிரைவிட பிரதோஷ தரிசனமே உயிரானது என்றிருந்தவர்.

நாயன்மாரின் இரண்டாம் மகன் மிகவும் கவலைக் கிடமான நிலையிலும் இவர்தம் சங்கல்ப வைராக்யம் தவறவில்லை.

“பெரியவா பார்த்துப்பா கவலைப்படாதே” என்று மனைவியிடம் ஆறுதல்கூறி சென்னையிலிருந்து எங்கோ வடக்கே இருக்கும் மகாகாவ் எனும் ஊருக்குக் கிளம்பி விட்டார்.

அந்த மார்கழி பிரதோஷத்துடன் அடுத்த ஆருத்ரா தினத்திலும் சாக்ஷாத் நடராஜ மூர்த்தியாம் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் சன்னதியில் கழித்திட ஆவல் பெருக்கி ஆட்கொண்ட பக்தி நாயன்மாரை எதற்கும் கலங்கவிட வில்லை.

அதன்பின்தான் சோதனை மிகுந்தது. நடுப்பகலில் ரயிலைப்பிடித்து சென்றவுடன் இங்கே குழந்தையின் நிலை மிக கவலைக்கிடமாகிவிட்டது. அந்த ரயில்வே குவார்டர்ஸில் பக்கத்து வீட்டிலிருந்த அன்பர்கள் வந்து பார்த்தனர். ஸ்ரீ மஹா பெரியவாளின் பக்தி ருசியை நாயன்மார் அங்கிருந்தோருக் கெல்லாம் வழங்கியிருக்க எல்லா வீட்டுக்காரர்களும் வலிய உதவிக்கு வருவது வழக்கம்.

இப்படி வந்து குழந்தையின் நிலைமையை பார்த்தவர்கள் அடுத்த நாள் வரை காத்திருந்து மகாகான் கேம்ப்பிற்கு ஒரு தந்தி கொடுத்துவிட்டனர். அது மாமிக்குத் தெரியாது.

மகாகானில் பிரதோஷ தரிசனம் அன்று சீக்கிரமே மாமாவிற்கு கிடைத்திருக்க அந்த தந்தி வந்ததும் அவர் அங்கிருந்து கிளம்பி சென்னை வரும்படியானது. ஆனால் தன் குழந்தையின் இந்த நிலையில் கூட கிடைத்தற்கரிய ஆருத்ரா தினத்தில் ஸ்ரீ பெரியவாளான ஆனந்த நடராஜரை தரிசிக்க இயலாமல் ஆகிவிட்டதே என்றுதான் இந்த பக்தரின் மனம் பாடுபட்டது.



இங்கே மாமிக்கு அவருடைய தாயார், தம்பி குடும்பம் என துணையாய் இருக்க, நாயன்மார் ஊரிலிருந்து அவசரமாக திரும்பிய சமயம் குழந்தை சற்றே தேறியிருக்கும் நிலையில் இருந்தான்.

உள்ளே நுழைந்து குழந்தையைக் கண்டதும் அந்த அதீத பக்தரின் செயலே வேறுபட்டிருந்தது. ஒரு சாதாரண பக்தன் இப்படிப்பட்ட நிலையில் குழந்தையை விட பெரியவா தரிசனம்தான் சாஸ்வதம் என்று கிளம்பியே இருக்கமாட்டான். அப்படியே கிளம்பி தந்தியை பார்த்து பதறிவரும்போது குழந்தை நல்லபடியாக இருப்பதைப் பார்ப்பவன் நிம்மதிப் பெருமூச்சு ஒன்றுடன் சந்தோஷப் பட்டிருப்பான்.

ஆனால் ஒரு நாயன்மாரின் உயரிய மனப்பக்குவத்தோடு பக்தி செய்தவருக்கு அப்போது சினம்தான் எழுந்தது. ஆருத்ரா தரிசனத்திற்கு அந்த நடமாடும் சிவனிடத்தில் இருக்கவிடாமல் இப்படி ஒரு தந்தி கொடுத்து அழைத்து விட்டார்களே என்ற ஆதங்கத்தை கோபமாக கொட்டினார். பின்னர் குழந்தையாய் சினம் தணிந்தார்.

அடுத்தநாள் ஆருத்ரா தரிசனம் அதிகாலையில் வீட்டில் ஸ்ரீ பெரியவாளுக்கு பூஜை செய்ய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்க மாமி வெளியே கோலம் போட்டுக் கொண்டிருந்தார். மாமாவிற்கு ஸ்ரீ பெரியவா தரிசனம் திருவாதிரை திருநாளில் கிட்டவில்லையே என்ற ஏக்கத்தில் முந்தைய இரவு தூக்கம் இல்லாமல் போயிருந்தது.

நாயன்மாரின் நிலை மகாகானில் அருளிக்கொண்டிருந்த மஹாபெரியவாளுக்கு தெரியாதிருக்குமா?

வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த மாமியிடம் நாலு வீடு தள்ளி இருந்த கல்யாணசுந்தரம் என்பவரின் மனைவி ஓடி வந்தாள். அந்த மாமியின் கையிலும் கோலம் போடும் அரிசிமாவு இருந்தது.

“மாமி! மாமி! இப்போ சித்தமுன்னாடி பெரியவா உங்காத்து உள்ளே நுழைந்த மாதிரி இருந்தது. உங்களுக்கு

தெரியலையா. நான் எங்காத்து வாசல்லே கோலம் போட்டுட்டிருந்த போது பார்த்துட்டு உடனே ஓடி வர்றேன்... உள்ளே இருக்காளா பார்க்கலாம்” என்று ஒரு பெரிய அதிசயத்தை படபடப்போடு கூறினார்.

அதையே பக்கத்து இன்னொரு வீட்டு பெண் ரேவதி என்பவளும் மாமியிடம் சொன்போது மாமிக்கு பெருமகிழ்ச்சி. தன் கண்ணுக்குத் தென்படாவிட்டாலும் ஸ்ரீ பெரியவா இப்படி சூட்சமமாக கிரஹத்தில் நுழைந்துள்ளதை எண்ணி பேரானந்த முற்றாள்.

தீராத, ஆவலை போக்க, சாக்ஷாத் ஸ்ரீ பெரியவாளே இங்கே சூட்சமமாக வந்தருளியுள்ளது புரிந்ததில் நாயன்மாரின் மனம் நிறைந்தது. தன் பெரும் அவாவை பூர்த்தி செய்யவே பெருங்கருணை கொண்டு ஸ்ரீ பெரியவா இப்படி தன் கிரஹத்தில் நுழைவதுபோல் இரண்டுபேருக்கு காட்சி தந்திருப்பதை உணரலானார்.

இப்படி ஈஸ்வரராம் மஹா பெரியவா இந்த நாயன்மாரின் விஷயத்தில் காட்டிய அருள் சற்றே வித்யாசமாய் அமைகிறது.

முதல் முன்றாவது பிரதோஷத்துக்கு வந்தவரிடமே இவர் பிரதோஷம் வர்றார் என்று ஒரு அறிவிப்பால் உணர்த்தியதில், பின் வரும் காலங்களில் நாயனாருக்கான பக்தி நெறியாக பிரதோஷ தரிசனத்தை அந்த ஈஸ்வர திருவாக்கே விதித்து விட்டதுபோல் அமைந்தது.

இந்த நாயன்மாருக்கான அடையாளம் பிரதோஷம்தான் என்பதை தானே வகுத்துக் கொடுத்துவிட்ட தெய்வம், அந்த சங்கல்பம் ஒரே ஒரு முறை தவறியபோது அப்படி தவறியதில் நாயன்மாரைப் போல் தாமும் தாபப்பட்டதுபோல் காட்டிக் கொண்டதுதான் விசேஷம்.. வித்யாசம்.

இத்தனை வெளிப்படையாக தெய்வமே பக்தர் வருகையை எதிர்பார்த்து வந்தாச்சா வந்தாச்சா என்று ஏங்குவதை என்னென்பது! அதுதெய்வத்தின் அபார கருணை காட்டுவதுடன் இந்த பிரதோஷ நாயன்மாரின் மேன்மையையும் உலகோருக்கு காட்டுகிறதன்றோ!



# 3. நாயன்மாரின் பக்தி மேன்மைகள்

**“ஏகாக்கிரஹபக்தி”**

**நா**மெல்லோருமே ஸ்ரீ மஹா பெரியவாளின் பக்தர்களே. ஸ்ரீ மஹா பெரியவா சர்வேஸ்வரராய் இருப்பாரோ இல்லையோ என்ற லேசாக தடுமாற்றமும் நம்பிக்கையும் நம்மில் பலருக்கும் இருக்கக்கூடும். அவரை பரிபூரண தெய்வம் என்று முழுமனதோடு கொள்வதில் நம் பக்தி சிறிதே மாறுபடலாம்.

ஆனாலும் அத்தனை பேருக்கு எத்தனையோ அனுக்ரஹம் கிடைத்துள்ளதே. எப்படி எப்படி யெல்லாமோ அதிசய சம்பவங்கள் நடந்துள்ளதே என்ற நம்பிக்கையோடு எதிர்பார்ப்போடுமாகிய பக்திக்கு நம்மில் யாவருக்கும் குறைவில்லை.

அது காரியத்தை சாதித்துக் கொள்ள உண்டான பக்தி

துன்பம் நேர்கையில் துதித்து பயன்பெறுவதோடு நின்றிடும் பக்தி. இது வேண்டும் அது வேண்டும் என்று அங்கலாய்த்துக் கொண்டு அதை அடைவதற்கென்று வேண்டும் வியாபார பக்தி.... ஆஹா மகான் இப்படியெல்லாம் அற்புத அருள் புரிந்துள்ளாரா என்பதை அறிந்து அலசிப் பார்த்தபின் அதன் தீர்ப்பாக ஏற்றுக் கொண்ட பக்தி.

இப்படி ஒட்டு மொத்தமாக எல்லா பக்தி வகைகளையும், எல்லா பக்தர்களையும் குறைத்து அளவிட்டு முடியாதுதான். அந்த தெய்விக சொருபத்தை பார்த்துக்கிட்டே இருக்க தோணுது என்ற ஆனந்த உணர்வோடு எந்த வேண்டுதலோ

கோரிக்கையோ இல்லாமல் சதாசர்வகாலமும் பழியாய் மகானின் சன்னதியிலேயே கிடந்த பக்தர்களும் பலர் இருந்துள்ளனர். ஆனால் அவர்களுக்கெல்லாமும் தங்களை ஈர்ப்பது இன்னதென்று அறியாத ஆனந்தமாய்தான் மகானின் தரிசனம் இருந்திருக்கக்கூடும்.

ஆனால் இந்த நாயன்மாருக்கோ ஒரு அலாதியான அனுபவம். பிரத்க்ஷமாக ஒரு தெய்வம் நம்முன்னே வந்து காட்சி தருவதாக வைத்துக் கொள்வோம்; அப்படி காட்சி தரும் வடிவத்தை அப்படியே ஏற்றுக் கொண்டல்லவா களிப்படைவோம். தும்பிக்கையோடு விநாயக பெருமான் தோன்றினாரென்றால் வந்து நிற்கும் கணபதியை அதே ரூபத்தில் கண்டுதானே மகிழ்வடைவோம்!

அவரை வேல் ஏந்திய குமாரனாக பாவித்து குதூகலிக்க தோன்றாதல்லவா. மீனாட்சியை மீனாட்சியாகவும், ஆண்டாளை ஆண்டாளாகவும்தானே மனம் ஏற்றுக் கொள்ளும்.

அப்படியிருக்க அவதரித்திருப்பது ஆதிசிவனே என்ற நம்பிக்கை மனதில் நிலைத்திருந்தாலும் இந்த திருஅவதார சொரூபத்துள் ஈஸ்வரரை தேடிப் பார்க்கும் அவநம்பிக்கை கொள்ளாதவரான நாயன்மாருக்கு இனி அந்த சிவனே மஹாபெரியவாளுள் தரிசனம் தர பிறை சூடி, கங்கையை தாங்கி, புலித்தோல் உடுத்தி, உடுக்கை அடித்த கோலத்துடன் வந்து நின்றாலும் அப்போதும் தண்டமேந்திய காஷாய திருஉருவம்தான் ஈசன் என்ற சஞ்சலமில்லாத உறுதிநிலை இருந்தது.

அந்த தண்டமேந்திய காஷாய நாதரே மற்ற எல்லா தெய்வங்களின் மேன்மையையும் குறிப்பாக குலதெய்வத்தை வழிபடும் முக்கியத்துவத்தை நமக்கெல்லாம் உபதேசித் துள்ளது உண்மை என்றாலும் இந்த நாயன்மாரை பொருத்தவரை ஸ்ரீ உண்மை வடிவில் ஒரு தெய்வம் வந்து கண் எதிரே நிற்கும்போது அதைவிட்டு வேறு காணாத தெய்வத்திடமா செல்வது என்ற 'ஏகாக்கரஹம்' நிலைத்திருந்தது.



அறிவுக்காக சரஸ்வதியையும் விநாயகரையும் நாடு! தனம் வேண்டுமா திருமலை தெய்வத்திடம் ஓடு! வியாதியா வைத்தியநாதரை வேண்டிக்கொள்! என்ற வகையான சஞ்சலங்களை மீறிய இந்த நாயன்மாரின் பக்தி இலக்கணத்தை அத்தனை சுலபமாக அறிந்துகொள்ள இயலாதுதான்.

எந்த வேண்டுதலும் கொள்ளாத மனநிலையோடு "என் மனமெங்கும் உன் இந்த துறவற திருஉருவமே நிலைபெறுமாறு செய்வாயாக" என்று மட்டும் வேண்டி அந்த ஆனந்த அனுபவத்தை மட்டும் ருசித்துக் கொண்டிருக்கும் 'பக்தி.'

ஒருமுறை ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளே இவரை காஞ்சி கச்சபேஸ்வரரை தரிசித்து வருமாறு கூறியபோது, 'என் கண்முன்னே காணும் கச்சபேஸ்வரரை விட்டுவிட்டு. எங்கும் போய் தரிசனம் செய்ய மனம் வரவில்லை' என ஸ்ரீ மஹாபெரியவாளிடமே சுந்தரர் போல் வாதிடும் அளவிற்கு மனம் உறுதி கொண்டிருந்தார்.

அதுபோலவே ஸ்ரீமடம் சந்திரமௌலீஸ்வரரை ஸ்ரீபெரியவா தரிசிக்கச் சொன்னபோதும் அதை இந்த நாயன்மாரின் மனம் பூரணமாக ஏற்கவில்லை. அப்படி ஒரு திடநம்பிக்கை ஸ்ரீபெரியவாளே தெய்வம் என்பதில்!

உலகப்புகழ் பெற்ற கடம்வித்வான் ஸ்ரீ விநாயகராம் அவர்கள், நெருங்கிய சொந்தமாக இந்த அற்புத நாயன்மாரை பெற்ற பெரும்பாக்யம் கொண்டிருந்தார்.

ஸ்ரீ விநாயகராம், 'உலகப்புகழ்' என்ற அடைமொழியை பெற்றதன் முழுப் பெருமையும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரிய வாளுக்கும், அந்த மாபெரும் தெய்வத்தை தனக்கு அடையாளம் காட்டிய நாயன்மாருக்குமே உரித்தாக்கி நெகிழ்கிறார்.

தந்தை, தாய் சித்தியடைந்துவிட இவருக்கு வழிகாட்ட பெரியப்பாவின் மைந்தராகவும், ஸ்ரீமஹாபெரியவாளின் அத்யந்த பக்தராகவும் இந்த நாயன்மார் கிடைத்திட்டது இவரது பூர்வ ஜன்ம பலனே!

தாயாரின் காரியங்களையெல்லாம் முடித்துக் கொண்டு அவர் வேதாரண்யம் புறப்பட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அங்கே அகத்தியாம்பள்ளியில் பூர்ண புஷ்களாம்பாள் சமேத ஹரிஹரபுத்ர சுவாமி ஐயனார்தான் இவர் குலதெய்வம்.

வம்சாவளியாக எல்லா முன்னோர்களுக்கும் இப்போதைய வாரிசுகளுக்கும் பின்வரும் வம்ச சந்ததியினருக்கும்கூட அருள்பாலிக்க காத்து நிற்கும் தெய்வமல்லவா குலதெய்வம் என்பது!

எந்த வைபம், எந்த கோரிக்கை என்றாலும் நாமெல்லோருமே நம் குலவழியோரை காத்து ரக்ஷித்துக் கொண்டிருக்கும் குல தெய்வத்தை விட்டு வேறு தெய்வத்திடம் செல்வதில்லை என்பதுதான் உலக நியதி!

ஆனால் இந்த நாயன்மாரின் பக்தியோ முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் உணரப்பட வேண்டியதாயிருந்தது. 'ஒருவரே தெய்வம்' என்ற உறுதி இருக்கும்போது அந்த ஒரே தெய்வம் நம்முன்னே நடமாடும் தெய்வமாய் அருள்புரிந்து கொண்டிருப்பது சத்தியமே என்ற உறுதியும் இருக்கும் போது அங்கே வேறு ஒரு தெய்வம் உண்டு என்ற நினைப்பு எழ வாய்ப்பில்லையல்லவா!

காட்சியளிப்பது கண்கண்ட தெய்வமில்லையோ என்று ஒரு துளி அவநம்பிக்கை இருந்தாலும் இந்த நாயன்மாரின் ஏகாக்கிரக பக்திநிலையை நாம் புரிந்து கொள்வது கடினம்.

"நீ ஏன் குலதெய்வத்தை தரிசனம் செய்யணும்னு வேதாரண்யம் வரைக்கும் போகணும்?" என்ற பீடிகையோடு நாயன்மார் குலதெய்வம் கோயிலுக்கு போய் வரவேண்டுமென்று சொல்லி தன்முன்னே நிற்கும் வித்வான் விநாயகராம் அவர்களை கேட்டார்.

விநாயகராமின் வெகுளித்தனத்திற்கு இதற்கான பதில் அளிக்கத் தெரியவில்லை. அண்ணா என்று அழைத்து பழகிய நாயன்மார் என்ன சொல்ல வருகிறார் என்றும் புரியவில்லை.



"நீ என்ன பண்ணு இங்கே பெரியவா சன்னதிக்கே வந்துடு இவாதான் குலதெய்வம் இவாதான் ஈஸ்வரன்... இவாதான் திருப்பதி வெங்கடாஜலபதி இவாதான் எல்லா தெய்வமும்" என்று தன் ஓங்கார நாதமாக முழங்கும் குரலில் உயர்த்தி உறுதியாக சொல்லிவிட்டார்.

ஸ்ரீவிநாயகராமின் கல்மிஷமில்லாத மனது அதை அப்படியே ஏற்றுக் கொண்டது வியப்பல்ல. அவர்தம் தர்மபத்தினியாம் ஸ்ரீமதி சந்திரா மாமியும் உடனே அதை பிடித்துக் கொண்டதுதான் நாயன்மாரின் கட்டளையின் சக்தி

அந்த சக்தி ஒரு நிலை மாறா நாயன்மாரின் பக்தி அளித்திட்ட சக்தி!

அந்தச் சம்பவத்திலிருந்து ஸ்ரீ விநாயகராம் அவர்களின் குடும்பமும் சகோதர சகோதரிகளின் குடும்பம் யாவும் குலதெய்வ வழிபாடு என்று வரும்போதெல்லாம் காஞ்சி பங்காரு அம்மன் தோட்டத்தில் அமைந்துள்ள எல்லா குலதெய்வமுமாய் காட்சி அருளும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா திருகோயிலை மட்டுமே நாடும் ஒருமித்த பக்திக்கு ஆட்பட்டுவிட்டனர்.

ஆரம்ப நாட்களில் ஒரு முறை "நீ பெரிய சன்னதிக்கு போய் உன் வாக்யத்தை வாசிச்சு காமி" என்று நாயன்மார் இவரிடம் சொல்ல இவரும் உடனே ஸ்ரீமடம் புறப்பட்டு விட்டார்.

ஆனால் அன்றோ ஸ்ரீமஹாபெரியவா விநாயகராம் போய் அமர்ந்து கடத்தை வாசிக்க ஆரம்பித்ததும் ஏனோ விடுவிடுவென எழுந்து உள்ளே சென்றுவிட்டார். வித்வானுக்கு மனம் கலங்கியது. இருந்தாலும் நாயன்மாரிடம் வந்து தான் தரிசித்து விட்டதாகவும் அங்கே வாசித்து விட்டதாகவும் கூறிவைத்தார்.

நாயன்மார் விடவில்லை.

"உன்னை பெரியவா பாத்து ஏதாவது பேசினாளா?" என்று கேட்டதும் ஸ்ரீ விநாயகராமுக்கு ஸ்ரீமடத்தில் நடந்ததை மறைக்க முடியவில்லை.

"அண்ணா! ஸ்ரீபெரியவா கடம் வாசிக்க உட்கார்ந்ததும் எழுந்து உள்ளே போயிட்டா... ஏன்னு தெரியலே" என்று தயங்கியபடி சொல்லி நின்றார்.

உடனே நாயன்மார் ருத்ரமூர்த்தி ஆனார். கோபம் கொப்பளிக்க இங்கிருந்து நீ கிளம்பலாம் என்று விட்டார். அவர் வார்த்தைகளை மீற முடியாமல் ஸ்ரீவிநாயகராம் சென்னை திரும்பிவிட்டார்.

நாம் என்ன தவறு செய்தோம்... இப்படி என் மேல் பிரதோஷம் அண்ணா ஏன் கோபம் கொள்ள வேண்டும்... ஸ்ரீபெரியவா என்னைப் பார்த்ததும் உள்ளே எழுந்து போய்விட்டதை சொன்ன போதல்லவா அண்ணாவிற்கு கோபம் வந்தது... ஒரு வேளை நம்புறத்தோற்றம் ஸ்ரீபெரியவா ஏற்றுக் கொள்ளத்தக்கதான வகையில் அமையவில்லையோ... தலையில் சிகை (குடுமி) வைத்துக் கொள்ளாமல் தரிசனத்திற்கு சென்றது தவறோ வேறு ஏதாவது தோஷமா.,.. அந்த தோஷம் நாயன்மாருக்கும் புலப்பட்டு விட்டதால்தான் கோபமுற்றாரா என்றெல்லாம் நாள் முழுவதும் கவலையும் சிந்தனையுமாக ஸ்ரீவிநாயகராம் மலைத்து வீட்டில் உட்கார்ந்திருந்தார்.

நாயன்மாரின் சினம் என்பது சீரியகுணத்தின் வெளிப்பாடு எல்லோரும் சீர்திருத்தப்பட வேண்டுமே என்ற தன்நலம் மீறி பிறர் நலத்திற்காக அவ்வப்போது பொங்கி வருவது.

பல பக்தர்களுக்கு நாயன்மாரின் கோபமே ஒரு குதூகல ஆசீர்வாதம். கோபம் கொண்டு கடிந்து நாயன்மார் ஒரு பக்தரிடம் வன்மையை காட்டுகிறாரென்றால் அது முழுக்க முழுக்க அந்த பக்தரிடம் நாயன்மார் கொண்டிட்ட அளவிலா அன்பினால் விளைந்ததாய்தான் இருக்கும்.

நாயன்மாரின் நியாயமான கோபம் யாரையும் பாதித்ததில்லை. மாறாக நல்லபல நன்மைகளை அவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தி ஏற்றமுறச் செய்துள்ளது.



அடடா அங்கே அவரிடம் போனால் கோபப்படுவார் என்று யாரும் தயங்கி நாயனாரின் பக்தி வைபவங்களை புறக்கணித்ததே இல்லை. அவர் நாவன்மைக்கு சக்தியுண்டு அர்த்தமும் உண்டு என்ற நம்பிக்கையோடு நாயன்மாரின் சினத்தை அனுபவிக்கவே பலர் ஆசைப் பட்டதுண்டு.

ஸ்ரீவிநாயகராமுக்கும் அண்ணாவின் இந்த கோபத்திற்கு ஏதோ உட்பொருள் இருக்கும் என்று தோன்றியதேயன்றி அது என்ன என்பதை அறியும்வரை தீரா கவலைதான்!

இங்கோ காஞ்சியில் நாயன்மாரின் தர்மபத்தினியாம் மாதுஸ்ரீ வேதாம்பாளுக்கும் கவலை பிடித்துக் கொண்டது. இப்படி நாயன்மார் வெடுக்கென கோபம் கொள்ளும் போதெல்லாம் அந்த சினத்தை எதிர்கொள்ளும் பக்தர்களின் சார்பாக இந்த தாயுள்ளம் தான் வக்காலத்து வாங்க வரும். தன் சொந்த அம்மான் மகனே மணாளனானதால் நம் நாயன்மாரை 'அம்மாஞ்சி' என்று விளிப்பதுதான் மனையாளின் வழக்கம்.

"என்ன அம்மாஞ்சி! இப்படி அவரை கோவிச்சுட்டேங்களே.... பாவம் ரொம்பவுமே பயந்து நடுங்கிட்டார்... ஒரு வாய் சாப்பிட்டு போவார்னு சமைச்செல்லாம் வச்சிருந்தேன்... நீங்க இப்படி செஞ்சுட்டேளே!... " என்று ஸ்ரீவிநாயகராம் அந்த வீட்டிலிருந்து வெளியே சென்ற அடுத்த நொடியே நாயன்மாரிடம் அங்கலாய்த்தாள்.

ஸ்ரீ விநாயகராமுக்கு மட்டுமல்ல. இப்படி நாயன்மாரின் கோபத்தை எதிர்கொள்ளும் எல்லா பக்தர்களுக்கும் பரிந்து பேசி இவருடைய சினத்தை பரிவாக மாற்றுவதே இந்த மாதுவின் நித்ய கைங்கர்யம்.

"அடிப்போடி.... நீயும் என்னை புரிஞ்சிகாம பேசறயே.... நான் ஏன் கோவிச்சுண்டேன்னு தெரியாம பேசாதே.... சரி சரி நீ ஓடிப்போய் அவனை நான் கூப்பிட்டேன்னு சொல்லி

கூட்டிண்டு வா ... தெரு முனை பிள்ளையார் கோயிலை தாண்டி போயிருக்க மாட்டார்" என்று மனைவியை விரட்டினார்.

அப்போதைய காலகட்டத்தில் கடம்வித்வானுக்கு காரில் வரும் வசதி இல்லை. பஸ்ஸை பிடிக்க கால் நடையாகத்தான் வரவேண்டியிருந்தது.

மாமி ஓடோடி வெளியே வந்து பிள்ளையார் கோயில் வரை சென்று அங்கிருந்து தெருமுழுதும் பார்த்தும் விநாயகராம் தென்படவில்லை. திரும்பி வீட்டிற்குப் போனாள்.

"பாவம்! ஒரு வாய் சாப்பிட கூட இல்லாம ஆட்டோ பிடிச்சு போயிட்டார் போலிருக்கு.. பார்க்க முடியலே" என்று கூறிவிட்டு தன் வேலையை பார்க்க அகன்றுவிட்டாள்.

ஆனால் நாயன்மார் உடனே செயல்படத் தொடங்கினார் நாயன்மாருக்கு சென்னையில் எந்த வேலை நடக்க வேண்டுமென்றாலும் அந்த வைணவ பக்தரிடம்தான் சொல்வது வழக்கம். அவர்தான் பாலாஜி.

போனை எடுத்து பாலாஜியிடம் நாயன்மார் ஏதோ ஒரு கட்டளையை கூறினார். அதன்படி பாலாஜியும் விநாயகராமின் இல்லத்திற்கு வந்தார்.

விநாயகராம் கவலையோடு உட்கார்ந்திருக்க பாலாஜி திடுதிப்பென்று வந்து நின்று "மாமாதான் உங்காத்துக்கு போகச் சொல்லி சொன்னார்" என்று நாயன்மாரை 'மாமா' என்று குறிப்பிடும் வழக்கத்தில் கூறினார்.

ஸ்ரீவிநாயகராம் அவர்களுக்கு இது ஒரு பெரும் ஆறுதலைத் தந்தது.

"என்ன என்ன சொன்னா அண்ணா?" என்று ஆவலோடு கேட்டார்.

"உங்காத்து பூஜை அறையை போய் பார்த்துட்டு வரச் சொன்னா... அதை கொஞ்சம் மாத்தி அமைக்கச் சொல்லி யிருக்கா" என்றார் பாலாஜி



பூஜையறையை மாற்றி அமைப்பதா? ஏதேனும் வாஸ்து சம்பந்தமான தோஷ நிவர்த்திக்காக அண்ணா இப்படி சொல்லியிருப்பாரோ என்றெல்லாம் விநாயகராமுக்கு சிந்தனை ஓடியது.

அந்த சந்தேகத்திற்கு ஏற்ப பாலாஜியும் கையில் ஒரு அளவுகோலும் நோட்டுப்புத்தகமுமாக பூஜையறைக்குள் நுழைந்தார்.

அங்கே எல்லோர் வீட்டிலும் காணப்படுவதுபோல் வெவ்வேறு சுவாமி படங்கள் சுவற்றில் அடிக்கப்பட்டும் கீழே வைக்கப்பட்டுமிருந்தன. அவைகள் ஒவ்வொன்றையும் ஸ்கேல் வைத்து பாலாஜி நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார்.

ஒன்றும் புரியாமல் விநாயகராம் நிற்க "சரி மாமா நான் கிளம்பறேன்." என்று சொல்லிவிட்டு கிளம்ப நின்றார்.

என்ன பாலாஜி எனக்கொண்ணும் புரியலையே எதுக்கு வந்தே. எதுக்கு இந்த படத்தையெல்லாம் அண்ணா அளவெடுக்க சொன்னா? என்று கேட்க பாலாஜியும்

"எனக்கும் ஒண்ணும் தெரியலே மாமா.... நீ அவாத்துக்கு போய் அவா பூஜை ரூமிலே என்னென்ன சுவாமிபடம் இருக்குன்னு பார்த்துட்டு அதோட அளவெல்லாம் எடுத்துண்டு வந்து எங்கிட்டே போன் பண்ணி சொல்லுன்னுதான் பிரதோஷம் மாமா சொன்னா. அதுக்கு மேலே அவரை எதுக்கு ஏன்னுன்னு என்னாலே கேட்க முடியலே" என்று அவரும் விடையளிக்க இயலாமல் சென்றார்.

அடுத்த மூன்றாம் நாள் அதற்கான விடை கிடைத்தது. ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா விநாயகப் பெருமானாய், ஐயப்பனாய், ஆறுமுகனாய், காமாட்சியாய், ராமசந்திர மூர்த்தியாய், ஆஞ்சநேயராய் எல்லா தெய்வங்களுமாகி இந்த பூஜை அறையில் அருள வெவ்வேறு அளவுகளில் வெவ்வேறு தரிசன திருக்கோலத்தோடு கிரஹத்துள் நுழைந்துவிட்டார்.

பாலாஜி தான் சிரம் மேல் தாங்கி வந்த பெரியவா திருவுருவங்களையும் ஏற்கனவே அளவெடுக்கப்பட்ட விதத்தில் அந்தந்த சுவாமி படங்களுக்கு மாற்றாக பொருத்திடும் பணியை ஆரம்பித்தார். எல்லா தெய்வ திருஉருவங்களுக்கு மேலும் அதே அளவின் ஸ்ரீபெரியவா வந்து அமர்ந்து கொண்டுவிட்டார்.

எல்லா தெய்வமும் ஸ்ரீபெரியவாளே என்பது போல் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் திருஉருவத்திற்கு பின்னே அத்தனை சுவாமிகளும் ஒளிந்தபடி அருளுவதான மாற்றத்தை நாயன்மாரின் ஏகாக்கிரஹ உறுதி செய்து விட்டிருந்தது.

ஸ்ரீவிநாயகராம் அவர்களுக்கும் அன்றைய தினத்திலிருந்து எங்கும் பெரியவா எதிலும் பெரியவா என்ற ஒரு நிலைப்பட்டு பக்தி ஏற்படலாயிற்று.

இப்போது ஸ்ரீவிநாயகராம் வீட்டில் மட்டுமல்ல, ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா சாக்ஷாத் தெய்வம் என்று பூரணமான நம்பிக்கை பெற்ற பாக்யம் யார் யாருக்கு கிட்டியுள்ளதோ அவர்கள் அனைவரின் வீட்டிலும் அனைத்து கடவுள்களும் ஸ்ரீபெரியவா திரு உருவத்தில் மட்டுமே காட்சி தருகிறார்கள்.

Concept என்ற ஆங்கிலவார்த்தை உண்டு. இப்படி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் திருஉருவில் மட்டுமே தெய்வ திருஉருவங்களை பார்த்து பரவச பக்தி செய்யும் Concept இந்த நாயன்மாரின் ஏகாக்கிரஹ பக்தியால்தான் ஏற்பட்டதெல்லாம்.

இப்படி இந்த நாயன்மாரின் திருக்கட்டளையின் சக்தி அதன்பின் விநாயகராம் மஹாபெரியவாளை தரிசிக்கும் போது அனுக்ரஹமாக மாறியிருந்தது.

நாயன்மாரின் வாக்கிற்கு கட்டுப்பட்டு மனதை அங்கு இங்கு என்று அலையவிடாமல் ஸ்ரீ பெரியவாளன்றி வேறு தெய்வமில்லை என்ற தெளிவோடு தரிசனத்திற்கு அதன்பின்



சென்ற விநாயகராம் அவர்களுக்கு ஸ்ரீ பெரியவாளின் ‘ஷொட்டு’ கிடைத்தது.

ஆம்! வித்வான் கொண்டு சென்ற கடவாத்யத்திற்குத் தான் அந்த ஷொட்டு! கடத்தை வாங்கிய தெய்வம் தன் திருக்கரங்களால் அதை தட்டி ஆசீர்வதித்து அந்த வாத்யத்தை வித்வானிடம் கொடுத்த அன்றைய தினத்திலிருந்து வாழ்வில் வளமும், மங்களங்களும் கொட்ட ஆரம்பித்துவிட்டது.

இப்பேர்ப்பட்ட தெய்வத்தைக் காட்டி தன்னை மட்டுமல்ல இவ்வுலகோரையும் நீயன்றி வேறில்லை என்ற ஒருமித்த மனம் கொண்டு பிடித்துக் கொள்ள மன்றாடி கேட்டுக் கொண்ட இவரன்றோ நாயன்மார் என்று விநாயகராம் அவர்கள் வியக்கிறார்.

இன்னொரு வினோதமான சம்பவமும் நாயன்மாரின் ஏகாக்கிரஹ பக்தியை எடுத்தியம்புகிறது.

காஞ்சி பங்காரு அம்மன் தோட்டம் ஸ்ரீ மஹாபெரியவா கோயில் கொண்டாடப்படும் உற்சவங்களில் அந்த பக்தர் கலந்து கொள்வார்.

வைபவத்தின் போது சன்னதியில் அருளும் ஸ்ரீமஹா பெரியவாளின் விக்ரகத்திற்கு அவரை அலங்காரம் செய்ய நாயன்மார் அனுமதிப்பார். இந்த நாயன்மாரின் வழிகாட்டுதலுக்கு பின்பே ஸ்ரீமஹா பெரியவாளிடம் பக்தி ஏற்பட்டதால் இவரிடம் பெருமதிப்புண்டு.

மிகவும் சிரத்தையாக ஸ்ரீமஹாபெரியவாளுக்கு அலங்காரம் செய்விப்பவருக்கு அத்தெய்வத்தை அசல் ரூபத்தில் பார்த்து பரவசப்படுவதுபோல் வேறு சில தெய்வ ரூபங்களிலும் பார்த்திட ஆசை.

பிரதோஷ சிவநாயன்மாருக்கு சகல தெய்வங்களும் ஸ்ரீ மஹாபெரியவா என்றிருக்க இவருக்கோ ஸ்ரீமஹாபெரிய வாளை சகல தெய்வங்களாய் பார்க்க ஆசை. அப்படியே தான் ஆசைப்பட்டதுபோல் மஹாபெரியவாளை அலங்கரித்து ரசித்தார். ஸ்ரீபெரியவாளை அம்பிகையாய் அலங்கரித்து

முடிந்ததும் நாயன்மாரை அழைத்து தரிசிக்கும்படி வேண்டிக் கொண்டார். அலங்காரத்தை சிலாகித்து நாயன்மார் தன்னைப் பாராட்டமாட்டாரா என்று பக்தருக்கு ஏக்கம். தரிசிக்க வந்த நாயன்மார் எதுவுமே வாய் திறவாமல் ஒரு ரியாக்ஷனையும் காட்டாமல் அகன்றதால் இவருக்கு சப்பென்றாகிவிட்டது.

பக்தர் யோசிக்கலானார். அப்போது அவருக்கு ஒன்று தோன்றியது. ஒருவேளை ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவர் சாக்ஷாத் சர்வேஸ்வரரே என்று உறுதியான பக்தியுடன் திகழும் நாயன்மாருக்கு ஸ்ரீபெரியவா விக்ரகத்தை அம்பிகையாக அலங்கரித்ததில் அவர் மனம் ஏற்கவில்லையோ என்னவோ என்று கருதினார்.

அவருடைய அடக்க முடியாத ஆவலோடு சென்னை வந்தவர் அடுத்த ஸ்ரீபெரியவா வைபவத்திற்கு காஞ்சி போவதற்குள் ஈஸ்வரராக மகாபெரியவாளை அலங்கரிக்க தேவைப்படுபவைகளை தேடித் தேடி வாங்கினார். பிறைச் சந்திரன், ஜடாமுடி, கங்கை, சூலம், நாகம் புலித்தோல் என ஒவ்வொன்றுக்கும் எதை எதைக் கொண்டு உருவாக்கலாம் என்ற பெரும் ஈடுபாட்டுடன் இடைபட்ட நாட்களில் சேகரித்துக் கொண்டு அந்த வைபவத்திற்கு புறப்பட்டார்.

அதன்படியே நாயன்மாரிடம் உத்தரவு பெற்று ஸ்ரீமஹா பெரியவாளை சிரத்தையுடன் சேகரித்த அலங்கார பொருட்களால் பரமேஸ்வரராய் உருமாற்றினார்.

அலங்கரித்த அவருக்கே பார்க்கப் பார்க்க ஆசைமிகுந்தது. அந்த பரமேஸ்வரர் அலங்காரம் நிச்சயம் நாயன்மாரை திருப்தி படுத்தியே தீரும் என்ற நம்பிக்கையோடு நாயன்மாரை கூப்பிட்டார்.

ஆனால் நாயன்மாரின் ரியாக்ஷன் இந்த அலங்காரத்தையும் அவர் மனம் ஏற்காததைக் காட்டியது.

ஆவலும் படபடப்போடும் நிற்கும் பக்தரை நாயன்மார் பரிவோடு நோக்கினார்.



"போடா அசடு" என்று அன்போடு ஆரம்பித்தார். "நீ பாவம் ரொம்ப சிரத்தையாத்தான் பெரியவாளுக்கு அலங்காரம் பண்ணியிருக்கே... பரமேஸ்வரர் மாதிரி பண்ணினாதான் எனக்கு பிடிக்கும்னு நினைச்சி நீ செஞ்சிருக்கேன்னு தெரியறது! ஏண்டா! நம்ம கண்ணு முன்னாடி காட்சி தர வந்திருக்கும் அந்த மஹாபெரியவான்னு நாமெல்லாம் தரிசிக்கிற திருக்கோலமும் தெய்வ சொரூபம் தான்னு நீ நம்பலையா? அந்த திருகோலத்தையே தியானிச்சு பக்தி செய்யாமே வேற நாம கண்ணால பார்க்காத வேற ரூபமா அவாளை ஏன் மாத்தணும்? நான் சாக்ஷாத் பரமேஸ்வரர்ன்னு சொல்றேன்னா அந்த பரமேஸ்வரரோட சாக்ஷாத் சொரூபம் மஹாபெரியவாளின் திவ்ய சொரூபமா இல்லாம வேற ரூபமாகவா இருக்க முடியும்?"

நாயன்மார் அன்றி வேறு எந்த பெரியவா பக்தருக்கு இப்படி ஒரு விசேஷமான ஏகாக்கிரஹ சிந்தனை எழுந்திருக்கக்கூடும்?

'இவரன்றோ நாயன்மார்' என்று இந்த பக்தர் மெய்சிலிர்க்கிறார்.

❖ ❖ ❖

# 4. கடும் விரதங்களை தாங்கிய பக்தி

**கொ**ல்லுமாங்குடிக்கு கிழக்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள திருத்தலையூரில் வாழ்ந்தவர் பசுபதி நாயன்மார். எப்போதும் சிவபெருமான் திருவடிகளை தியானித்து மேலும் தனக்குத்தானே ஒரு கடுமையான தவத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

ஊரிலிருந்த தாமரைத் தடாகத்தில் தினமும் இறங்கி நிற்பார். கழுத்துவரை உடல் நீரில் மூழ்கி நிற்கும். தன் இரு கரங்களையும் குவித்து வணங்கிக் கொண்டே மனமுருகி சிவபிரானின் திருவடிகளை நினைத்தபடி ருத்ர மந்திரத்தைச் சொல்வார்.

இத்தவத்தின் மேன்மையால் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டு ருத்திர பசுபதி நாயனார் என்று புகழ் பெற்றார்.

அதே அம்சத்தோடு கூடிய ஒரு தவத்தை பிரதோஷ சிவநாயன்மாரும் மேற்கொண்டிருப்பதைக் காணலாம்.

புராணத்தில் முனிவர்கள் எத்தனையோ காலங்கள் தவமாய் கிடந்து அதன்பின்தான் ஈஸ்வர தரிசனம் பெற்றுள்ளனர். தவமிருக்கும் காலங்களில் பல கஷ்டங்களை தாங்கிக் கொண்டுதான் ஈஸ்வர வருகையை மனதிடத்தோடு எதிர்பார்த்து காத்திருந்தனர்.

அப்படியிருக்க ஒரு துளியும் உடல் வருத்தமின்றி எந்த லௌகீக சுகங்களையும் துறக்காமல் எந்த ஒரு கடுமையான



உடல் வருத்தத்துக்கு ஆட்படாமலேயே நமக்கெல்லாம் இந்த கலியுகத்தில் அந்த ஈஸ்வரரே வலிய வந்து நம்மில் ஒருவராய் அருளியுள்ளார்.

இப்பேர்ப்பட்ட ஈஸ்வர கருணையை மிக சாதாரணமாக எடுத்துக் கொண்டு இதன் மேன்மையினை உணராத பாதிப்புடன் வாழும் நமக்கெல்லாம் இந்த மேன்மையை உணர்த்தவே இந்த நாயன்மார் தோன்றியுள்ளார் போலும்

நாயன்மாரின் இல்லம் காஞ்சி ஸ்ரீமடத்திலிருந்து நாலு கிலோ மீட்டர் தூரத்தில் பங்காரு அம்மன் தோட்டத்தில் அமைந்துள்ளது. அங்கே வசிக்கும் பக்தர்கள் தினமும் பெரியவாளை தரிசிக்க மடத்திற்கு சென்று வருவதுண்டு. மிக சுலபமாக சென்று வரும் வசதிகள் உண்டு. பஸ், ஆட்டோ கிடைப்பதெல்லாம் சிரமமே இல்லை.

நாமெல்லாம் பெரியவா தரிசனத்தை மிக மிக சுலபமாகவும், சிறிதும் சிரமப்படாமலும் செய்துவிட்டு வருவதையே பெரிதாக நினைப்பவர்கள்.

ஆனால் இதில்தான் நாயன்மார் மற்ற பக்தர்களிலிருந்து மாறுபட்டார். பெரியவா தரிசனத்தை அவர் அத்தனை சாமான்யமாக எடுத்துக் கொள்ளவில்லை.

முன்பே சொன்னதுபோல் புராணபுருஷர்கள் எத்தனையோ தவமிருந்து எத்தனையோ சோதனைக்கு ஆட்பட்டபின் அவர்களுக்கு க்ஷணநேரம் கிடைக்கப்பெற்ற தெய்வ ரகசியம் இப்போது மிக சுலபமாக பெரியவா தரிசனமாக கிடைத்துள்ளது.

சாக்ஷாத் தெய்வம் என்று மஹாபெரியவாளை பூர்ணமாக ஏற்றுக் கொள்ளும் எந்த ஒரு பக்தனுக்கும் இப்படி ஒரு உணர்வு இருந்தாக வேண்டும்.

ஸ்ரீமடத்தில் காட்சி அருள்வது சாதாரண சந்யாசியல்ல சாக்ஷாத் கைலாசபதி! தன் பெரும் கருணையால் தன்னை எளிமையாக்கி அந்தத் தெய்வம் இத்தனை கீழே இறங்கி வந்திருப்பதை 'Taken as granted' என்ற ரீதியில் பக்தி செய்ய நாயன்மாரின் மனம் ஒப்பவில்லை.

ஸ்ரீபெரியவாளின் தரிசனத்திற்காக ஒரு கடும்தவத்தை வகுத்துக் கொண்டார். அதன் காலம் நாமெல்லாம் அகால வேளை என என்றும் விழித்து பார்த்திராத நட்ட நடுநிசி இரண்டரை மணி! அப்போது ஊரே உறங்கும். வீதியில் ஆள் அரவம் துளியும் இராது.

அந்த மை இருட்டில் வீட்டிலிருந்து ஸ்ரீமடத்திற்கு நாலு கிலோ மீட்டர் நடந்து செல்ல வேண்டுமென்பது சங்கல்பம். இப்படி தினமுமே இரண்டரை மணி இருட்டில் இயற்கை சீற்றங்கள் எது வந்தாலும் ஏற்றுக் கொண்டு தனியே போவதால் திருடர் பயம், விலங்குகளின் பயம் எல்லாமுமே இருக்கும் என்று எதிர்பார்த்து இவைகளையெல்லாம் துணிவோடு எதிர்கொள்ளும் திடமனத்துடன் ஏற்றுக் கொண்ட கடும்தவம்.

இப்படி ஒரு அசாதாரண விரதத்தை சங்கல்பித்துக் கொண்டிருக்கும் நாயன்மாரின் வயது எழுபதை தாண்டிய தள்ளாத வயது.

'நாயன்மார்' என்பவர் எப்படி இருந்திருக்கக்கூடும் என்று அறியாதவர்களுக்கு அந்த அர்த்த ராத்திரி நிசப்தத்தை தன் வெங்கலகுரல் தேவார ஓசையால் தெய்விகமாக்கிக் கொண்டு நடக்கும் இந்த நாயன்மாரை பார்ப்பது பெரும்பாக்யமாக அமைந்தது.

இந்த வயதில் தூக்கத்தை துறந்து, கடுங்குளிர், மழை என்ற இயற்கைச் சீற்றங்கள், நாய் குரைப்பு, கயவர்கள் பயம் எதையும் நாயன்மார் பொருட்படுத்தியதில்லை.

இப்படி ஒரு கடும் தவத்தை தவிர்க்க ஓராயிரம் நியாயமான காரணங்களையும் சமாதானத்தையும் செய்து கொள்ளலாம்தான். அசாதாரணமான எந்தச் சூழல் இடராக வந்தபோதும் நாயன்மாரின் வைராக்யம் தளரவில்லை.

ஒரு முறை பெருமழை! வழியெல்லாம் மார்பளவு வெள்ளம்! கலெக்டர் ஆபீஸ் அருகே இருந்த தரைப்பாலத்தில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தை பார்ப்பதற்கே பீதியளிக்கும் ஆபத்தான சூழல்.



யாருக்கும் இந்த நிலை அச்சத்தைக் கொடுத்தே தீரும். அதிமுக்கிய வேலையாயிருந்தாலும் வெளியே கூட வரமுடியாததால் அதையே தவிர்த்தாக வேண்டும். உயிருக்கே ஆபத்தென்பதால் சங்கல்பத்தை அன்றையதினம் தவிர்த்துவிடுவது ஸ்ரீபெரியவாளுக்கே நியாயமாகத்தான் இருக்கும்.

ஆனாலும் நாயன்மாரின் மனம் சற்றும் தளரவில்லை. மார்பளவு வெள்ளத்தில் உயிரை துச்சமாக்கி அவர் அன்றும் தன்விரதத்தை கடைபிடித்து ஸ்ரீமடம் அடைந்ததை அங்கிருந்த கைங்கர்ய அன்பர்கள் அறிந்ததில் இப்படியும் ஒரு பக்தியா என்று வியப்பிலாழ்ந்தனர்.

மார்கழி நடுநடுங்கும் குளிரிலும் ருத்ராக்ஷ மாலையை மட்டும் தாங்கும் நாயன்மாரின் வெற்று உடம்பு தவத்தின் தாக்கத்தை தாங்கிக் கொள்ளும்.

ஒரு நாள் நடக்க முடியாமல் போகவே காஞ்சி பஸ் நிலைய ராமாஸ்கேப்பிலிருந்து கீழே சாலையில் புரண்டபடியே மெல்ல நகர்ந்து சென்றதை அறிந்த துணைவியாருக்கு சொல்லொணா வேதனை மிகுந்தது.

ஆனால் இப்படி ஊர்ந்து ஸ்ரீமடம் வரை சென்று விஸ்வரூப தரிசனத்திற்குப் போய் நின்ற நாயன்மாரை ஸ்ரீ பெரியவாளெனும் காருண்யதெய்வம் "கால் ரொம்ப வலிக்கிறதோ?" என்று பரிவாக கேட்டதில் நாயன்மார் பட்ட கஷ்டங்கள் பறந்தோடி பரவசமடைந்தார்.

இந்த கடும்நடை விரதமட்டுமல்ல, தினமும் முட்டி தேய வீட்டில் பெரியவா சன்னதியில் முட்டி பிரதட்சணங்கள், ஸ்ரீ மஹா பெரியவாளை தரிசிக்கும் சமயங்களில் சூழ்நிலை சாதகமா அமைந்துவிட்டால் உடனேயே அங்கப்பிரதட்சணம், அதைத் தவிர ஸ்ரீ மஹாபெரியவாளின் வைபவங்களில் சுவாமி புறப்பாட்டில் அவ்வயதிலும் அங்கப்பிரதட்சணம் என்று நாயன்மார் மேற்கொண்ட பல கடும் விரதங்களின் வரிசை நீள்கின்றன. ஆங்கரை பெரியவா எனும் மகான் புராணம் எதிலும் கூட படித்திராத வகையில் இந்த நாயன்மாரின் பக்தி வழிகள் விசேஷமாக இருப்பதை சிலாகிக்கிறார்.

இப்படியெல்லாம் கடும் விரதங்களை தெய்வம் விரும்புகிறதா? இப்படி உடலை வருத்திக் கொண்டால்தான் தெய்வம் திருப்தி அடையுமா என்றெல்லாம் நாம் அலசமுடியாது.

பக்தி என்பதை பக்தி என்ற ஒன்றுக்காக மட்டுமே அனுபவித்த நாயன்மார்களுக்குத்தான் அதன் சுவை தெரியும்.

"கால் வலிக்கிறதா" என்று கேட்கத் தெரிந்த தெய்வத்திற்கு இந்த எழுபது வயதில் இவர் மேற்கொண்டுள்ள இந்த கடும்விரதத்தை விட்டுவிட சொல்லத் தெரியாதா.

ஆனாலும் தெய்வ சங்கல்பமும் இதற்கு இசைந்தேயிருப்பதை அறியும்போது இதிலுள்ள சூட்சமம் நமக்கு புரியவில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் வெளிப்படையாகத் தெரிகிறது.

ஒரு நாயன்மார் என்பவர் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருந்திருப்பார்கள் என்பதை உலகோர் அறியும்படி செய்ய ஒரு பக்தர் தெய்வத்திற்கு தேவைப்பட்டிருக்க வேண்டும்.

அந்த உதாரண நாயன்மாரின் கடும் விரதங்களை நாம் அறியச் செய்ததோடு இப்படியும் ஒரு நாயன்மார் இப்போதும் உள்ளார் என்று நாயன்மாரையும் மேன்மைப்படுத்தியுள்ளார் பெரியவராயினும் தெய்வம்.

❖ ❖ ❖



# 5. தனித்துவமான பக்தி

**ஆ**ண்டாள், பக்த மீரா இவர்களின் பக்திமார்க்கம் மிகவும் மாறுபட்டதாயிருக்கும். வணங்கித் தொழவேண்டிய தெய்வத்தையே தன் மணாளனாக பாவிக்கும் பக்தியின் உச்சத்தில் திருப்பாவை நாயகியின் சுவாதீனத்தை காண்கிறோம்.

அதே சுவாதீனம் இந்த நாயன்மாரிடமும் இருந்தது.

ஒருபுறம் மீளா அடிமை என்று அப்பர்பிரானின் பவ்யமான பக்தியில் தன்னை ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் Bonded Slave ஆக பாவித்துக் கொள்பவர் வேறு சில சமயங்களில் அத் தெய்வத்திடமே கோபித்துக் கொண்ட சுவாதீனத்தையும் பக்தியாக பாவிக்கும் மனம் கொண்டிருந்தார்.

"வர வர நான் பெரியவா கிட்டே எல்லாரும் பக்தியோட இருக்கணுமேன்னு ஆதங்கப்பட்டு அவாளை கோவிச்சுக்கறேன் ஆனா அதை இப்போதெல்லாம் யாரும் பொருட் படுத்தறதில்லே...."

ஏன் பெரியவா கிட்டேயே அசட்டுத்தனமாக கோவிச்சுண்டு வந்துடறேன்... அப்போவெல்லாம் என்னை சமாதானப்படுத்த அவா யார்கிட்டேயாவது சால்வை பழம்னு எதையாவது கொடுத்தனுப்பி இருக்கா... ஆனா இப்போ நாலு நாளாச்சு... நான் பெரியவா தரிசனத்துக்கு போகலே... ஆனா பரமேஸ்வரன் பெரியவாளுக்கு இப்போ என் கோபம் பெரிசா தோணல போலிருக்கு... நாலு நாளாகியும் யாரும் வரலே."

எப்பேர்ப்பட்ட சுவாதீனம் பாருங்கள்.

நாமெல்லாம் பெற்ற தாயிடம் கோபித்துக் கொள்ளும் உரிமையோடு நாயன்மார் ஸ்ரீபெரியவாளிடமே தான் கோபித்துக் கொண்டதை சொல்லி ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த க்ஷணமே அங்கே ஸ்ரீபெரியவாள் கட்டளையின்படி வீட்டிற்குள் நுழைந்த ஸ்ரீமடத்து அன்பர் "இந்த வில்வ மாலையை உங்களுக்கு போட்டுட்டு வரச் சொன்னா பெரியவா" என்று கூறி வந்து நின்றார். நாயன்மாருக்காக அத்தெய்வமே தன்னைத் தாழ்த்திக் கொண்டதன் மூலம் நாயன்மாருக்கு பெருமை சேர்த்துள்ளது.

இப்படி ஒரு ஊடலை செய்யும் உரிமையினை நாயன்மாரின் உயரிய தூய பக்தி இவருக்கு அளித்திருந்தது.

இதற்கு முற்றிலும் மாறான பக்தியையும் நாயன்மார் காட்டமுடிந்தது. அந்த உமாமகேஸ்வரரான மகா பெரியவாளையே தன் மணாளனாகப் பாவிக்கும் ஒரு தனித்துவமான பக்தியையும் அவர் பூண்ட அதிசயத்தை மற்ற பக்தர்கள் காணமுடிந்தது.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் வைபவங்களில் சுவாமி புறப்பாட்டை முடித்துவரும் ஸ்ரீமஹாபெரியவாளுடன் நாயன்மார் மாலை மாற்றிக் கொண்டு மகிழும் பக்தி விசித்திரமாக இருக்கும்.

ஊர்வல நாதஸ்வர கலைஞர்கள் 'மாலை மாற்றினாள்' பாடலை இசைக்க ஸ்ரீமஹாபெரியவாளின் விக்ரகமும் நாயன்மாரும் பரஸ்பரம் மாலையை மாற்றிக் கொள்ளும் காட்சி பார்ப்போரை இப்படியும் ஒரு பக்தியா என்று எண்ண வைக்கும்.

நீயே கதி என்ற சரணாகதத்தை மீளா அடிமையாய் ஒருபக்கம் ஸ்ரீமஹா பெரியவாளிடம் அடிபணியும் பாவத்துடனும், மறுபக்கம் மணமுடித்தவனாக அந்த கண்கண்ட தெய்வத்தை கைப்பிடித்த கணவனாக 'நீயே பொறுப்பு' என்று பூர்ணமாக ஒப்படைத்துவிடும் பாவத்துடனும் நாயன்மாரின் பக்தி பரிணாமங்கள் பல்வேறு வித்யாசங்களாக மணம் வீசுகின்றன.



இன்னும் சில அதீதங்களையும் நாயனாரின் பக்தி காட்டியுள்ளது.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

என்பது சிவனடியார்களின் மந்திரம். அந்த சிவனே ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா என்று தன் உறுதியான நம்பிக்கையை இந்த மந்திரவரிகளை மாற்றிச் சொல்வதன் மூலம் நாயன்மார் வெளிப்படுத்தியுள்ளதும் அவருடைய தனித்தன்மைக்கு எடுத்துக்காட்டு.

**தென்னாடுடைய பெரியவா போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

என்று நாயன்மாரின் நாவிலிருந்து வந்த வாக்கின் பலம் அந்த திருவாக்கு மிக சத்தியமாகி தென்னாட்டுக்கு உரித்தான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் ஈசன் கடல்கடந்து எல்லா நாடுகளிலும் எந்நாட்டவர்களும் கொண்டாடி ஆனந்திக்கும் இறைவராக வியாபித்துள்ளார்.

அதே போல் சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய திருக்குருகாவூர் எனும் க்ஷேத்ர வெள்ளடைநாதர் மீதான பதிகம் இந்த நாயன்மாருக்கு மட்டுமே பிரத்தியேகமானதோர் ஈர்ப்பைத் தந்துள்ளது.

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான் என்று தொடங்கும் இப்பதிகத்தைப் பற்றி யாரும் அவ்வளவாக அறிந்திலாதபோது ஒரே ஒரு காரணத்தால் நாயன்மாரை இது கவர்ந்தது.

இந்த தேவாரத்தில் இரண்டாம் பாடல்

**ஆவியைப் போகமே தவிர்த்தென்னை ஆட்கொண்டாய்**
**வாவியிற் கயல்பாயக் குளத்திடை மடைதோறும்**
**காவியும் குவளையும் கமலமுஞ் செங்கழுநீரும்**
**மேவிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே**

என்பதாக உள்ளது.

‘காவியும் குவளையும்’ என்று இந்த தேவாரத்தில் அமைந்துள்ள வார்த்தைகள் ஸ்ரீபெரியவாளின் அடையாளங் களாக இருப்பதால் நாயன்மாரை இது ஈர்த்துள்ளதில் வியப்பில்லை.

இந்த ‘இத்தனையாமாற்றை’யின் பத்துப் பாடல் களையும் தன்னிடம் வரும் பெரியவா பக்தர்களுக்கு ஒரு ஈஸ்வர கவச துதியாகவே நாயன்மார் பரப்பியிருந்தார்.

ஏதேனும் தீராத பிரச்னையோ நோய்நொடியோ நாயன்மாரை சார்ந்த பக்தர்களுக்கு நேரும்போது இந்த தேவார பத்து பாடல்களையும் கூட்டுப் பிரார்த்தனையாக சில முறைகள் சொல்வதற்கு சங்கல்பித்து அத்தனை முறை சொல்லி முடிந்ததும் வந்த வியாதியும் பிரச்னைகளும் சொல்லிக் கொள்ளாமல் ஓடியிருப்பது சிலரது சத்தியமான அனுபவமாயுள்ளது.

இது நாயன்மார் காட்டிய தனித்துவமான பக்திநெறி.

மேலும் ஹோமம் செய்யும் போது சில வேத மந்திரங்களைத்தான் இத்தனைமுறை ஜபித்து ஜபித்து ஆவர்த்தி செய்வது வழக்கம் ஆனால் கிருஷ்ணகுமார் என்ற பக்தர் தான் கண்ட ஒரு வித்யாசமான நாயனாரின் வழியைச் சொன்னார்.

இந்த தேவாரமான இத்தனையாமாற்றையே நாயன்மார் மந்திர ஜபமாக்கி ஆவர்த்திகளை செய்ததைக் கேட்கும்போது நாயன்மாரை நாம் சாதாரணப் பிறவியாக பார்க்க முடியவில்லை.

நாயன்மாரின் ஈடில்லா பக்தியின் உச்சகட்டமான ஒரு அதீதமும் உண்டு.

கண்ணப்ப நாயனாரின் மூட பக்தியையும் இது மிஞ்சி நிற்கிறது. யாரும் கேட்டிராத, யாரும் எண்ணிக்கூட பார்க்காத அசாதாரண பக்தி இது.

‘ஆனந்தமாகி அறிவிழந்து’ என்று அபிராமி பட்டர் பக்திப் பித்தை அழகாக வர்ணிப்பதுபோல் நாயன்மார் அந்த



பித்தனிடம் கொண்ட பக்தியும் அறிவு தெளிவு என்பதை யெல்லாம் கடந்துள்ளது.

சாக்ஷாத் பரமேஸ்வரரே என்று நம்புகிற நாயகரின் ஸ்தூல உடம்பின் அத்தனையும் சிவம் தானே! அத் திருஉடலிலிருந்து வெளிப்படும் எல்லாமுமே ஈஸ்வர அம்சமல்லவா! இப்படித்தான் இந்த நாயன்மாரின் அதீத பக்தி முடிவுசெய்துவிட்டது.

அந்த திருஉரு கொப்பளித்து வெளியாகும் நீரை சிவலிங்க அபிஷேக தீர்த்தமாக உட்கொண்டு அதை பெரும்பாக்யமாகவும் கருதிய நாயன்மாரின் பக்தி எல்லை எங்கோ சென்றுள்ளது.

ஸ்ரீ பெரியவா கொட்டகைக்கு போய்விட்டு திரும்பி வந்ததும் நாயன்மார் அங்கே ஓடுவார். அங்கே குழியில் உச்சிஷ்டமாக தேங்கியிருக்கும் கொப்பளித்த நீரையும், அல்பசங்கசுத்தி நீரையும் இவர் தீர்த்த பிரசாதமாக ஆனந்தமாக உட்கொள்வார். நீலகண்டரான மஹா பெரியவா திரு கண்டத்திலிருந்து வெளியாகும். கபம் இந்த நாயன்மாருக்கு தேவா அமிர்தமாக ஆனந்தமளிக்கும். ஸ்ரீபெரியவாளிடம் கைங்கரியம் செய்த சில அத்யந்த சீடர்களே இதையெல்லாம் பார்த்து இதுபோலும் ஒரு பக்தியா என்று திகைத்ததுண்டு.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் ஒவ்வொரு அம்சத்தையும் அனுபவித்து பக்தி செய்யும் நாயன்மாருக்கு ஈடுண்டோ!

❖ ❖ ❖

# 6. பரவிடும் பணிசெய்த பக்தி

**நா**யன்மாரில் நால்வரின் திருப்பணியும் இன்னும் மற்ற சிவனடியார்களின் திருப்பணியும் சிவபெருமானை பக்தி செய்து ஆனந்தித்ததோடல்லாமல் அந்த சிவபக்தியை பரவிட செய்வதுமாகவே இருந்துள்ளது.

சிவாலயங்களுக்கெல்லாம் சென்று அங்கு உறைந்தருளும் சிவனைப் போற்றி பாடுதலே சிவனடியார்களின் பக்தி வழியில் முக்கியமானதாகத் திகழ்கிறது.

சதாசர்வகாலமும் சிவனவன் சிந்தனையோடு, ஏதோ ஒரு பக்தி நெறியை வழுவாது வாழ்ந்த சிவனடியார்களைப் போல் பெரியவாளை பக்தி செய்து அந்த ஆனந்தத்தை தாங்கள் மட்டுமே அனுபவித்தவர்களாக பல பக்தர்கள் இருக்கலாம்.

ஆனால் ஈசன் புகழை திக்கெட்டும் பரவிடும் பணியை செய்த ஞானசம்பந்தர் அப்பர், சுந்தரர், திருநாவுகரசர் இவர்களைத்தான் நால்வராக நாடறிந்துள்ளது.

சீரிய பக்தியுடன் அவர்களிடம் ஒரு சிறப்பான மனப்பான்மை இருந்தது. தானுண்டு தன் சிவ தியானமும் குறிக்கோளுமுண்டு என்று இருந்துவிடாமல் நாடெங்கும் சென்று எல்லா சிவாலய பெருமானையும் பாடிப் பரவிடும் பெரும்பணியை ஒரு பொதுநல தொண்டாகச் செய்த விசேஷம்தான் அது.

வெவ்வேறு நாயன்மார்களின் குணங்களை கொண்ட பிரதோஷ நாயன்மாரிடம் இந்த பரவிடும் பக்தி சிந்தையும் மேலோங்கியிருந்தது.



தன்னை நாடி வந்த பக்தர்களையெல்லாம் “பெரியவாளை பிடிச்சுக்கோ” என்று பக்தி ஊட்டுவதே அவருக்கு ஆனந்தம் தந்தது.

பெரியவாளை விட்டு வேறு தெய்வங்களை அவர்கள் நாடுவதை அறிந்தால் சினம் கொள்வார்.

ஸ்ரீமஹா பெரியவாளை அறியாமல் உழல்கிறார்களே என்று அவர் மனம் ஆதங்கப்படும். எல்லோருமே பெரியவாளை உணர்ந்து பக்தி செய்யும் வகையில் என்ன செய்யலாமென்று சதா எண்ணிக்கொண்டே இருப்பார்.

ஸ்ரீ மஹாபெரியவாளை பக்தி செய்தவர்கள் ஏராளமென்பது உண்மையே. ஆனால் அதில் அத்தனைபேருக்கும் பெரியவா பக்தி என்பதை பரப்பிட வேண்டுமென்று தோன்றியதேயில்லை. மெனக்கெட்டு இதற்காக பாடுபட்டவர்களாக பக்தர்கள் இருந்ததில்லை.

திரு. ரா. கணபதி அவர்கள், திரு. டி.எம்.பி மகாதேவன் அவர்கள், திரு பரணீதரன், திரு டாக்டர் டி.வி. சுவாமிநாதன் போன்ற சிலர் அந்தக் காலத்திலேயே ஸ்ரீ பெரியவாளின் மகிமைகளை புத்தகவடிவமாக எழுதியுள்ளார்.

ஆனாலும் இவர்கள் யாவருமே வியக்கும் வகையில் இந்த நாயன்மாரின் பக்தி இருந்ததில் இவர்களெல்லாம் கூட நாயன்மார் எழுமூரில் கொண்டாடிய ஸ்ரீபெரியவா வைபவங்களில் கலந்து கொண்டதில் இவருடைய பக்தி சிரத்தை வெளிப்பட்டது.

இவர்களோடு திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும் திரு சதாசிவம் அவர்களுக்கும் இந்த நாயன்மாரிடம் மிகுந்த மரியாதை உண்டு. அடிக்கடி அவர்களும் நாயன்மாரின் எளிய இல்லத்திற்கு வருவதுண்டு. நாயன்மாரால் கொண்டாடப்படும் பெரியவா வைபவங் களுக்கு பொருள் உதவியும் செய்வதுண்டு.

இவை எல்லாவற்றுக்குமே நாயன்மாரின் பக்தி சற்றே வித்யாசமாக பொதுநலம் கருதும் பக்தியாக அமைந்த தென்பதே காரணம்.

புத்தக வடிவில் பெரியவா புகழை சிலர் பரப்பிட்ட காலகட்டத்தில் ஸ்ரீமஹாபெரியவாளின் அனுஷ நட்சத்திரம் அமையும் மாத ஜயந்தி மற்றும் வருட ஜயந்திகளை கொண்டாடுவதன் மூலம் பல பக்தர்களுக்கு பெரியவா பக்தி ருசியை ஊட்டிய முன்னோடியாக இந்த நாயன்மார் ஒருவரே திகழ்கிறார்.

ஆத்மார்த்தமாகவும், தன்னல தம்பட்டமில்லாமலும் பூர்ண பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டதால் இல்வைபவங்கள் பல வி.ஐ.பி. முக்கியஸ்தர்களையும் பெரியவா பக்திக்கு இழுத்துள்ளது.

“என் ஜயந்தியை குறைச்சுட்டயோ” என்று குழந்தையாக மஹாபெரியவாளே கேட்டதில் ஒவ்வொரு வருட ஜயந்திவைபவங்களும் சிறப்புற்று எங்கோ வடக்கில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த சங்கரருக்கே ஆனந்தமளித்தது.

வருடம் தோறும் வாழிய நீ நீடுழி சங்கர சிவா, பெரியவா அந்தாதி என அகத்தியான்பள்ளி கிருட்டிணமூர்த்தி நாயன்மாரின் கட்டளைப்படி கவி எழுத அதெல்லாம் ஸ்ரீ மஹாபெரியவாளின் பக்தியை இன்றும் பரவிக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையே இப்போதைய முகநூல் ‘யூ ட்யூப்’ என்பதெல்லாம் வராத காலத்திலேயே ‘ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் மகிமை’ என்ற தலைப்பில் நாலுபக்க பத்திரிகையாக நாயன்மாரின் கட்டளைப்படி எழுதி அச்சிட்டு அந்த பிரதிகளை பிரதோஷம் தோறும் சிவாலயங்களில் விநியோகம் செய்யும் concept நாயன்மாரின் மனதில்தான் முதலில் உதித்திட்டது.

‘வாயினால் உன்னைப் பரவிடும் அடியேன் படுதுயர் களைவாய்’ என்ற வரிகளை தலைப்பிலும் ‘பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்’ என்ற சுந்தரமூர்த்தி சுவாமி தேவார வரிகளை அடியிலும் பதிக்கும்படி நாயன்மாரால் உத்தரவிடப்பட்டு வெளியிடப்பட்ட அந்த



நாலுபக்க பத்திரிகைதான் இன்றைய முகநூல், யூ ட்யூப் களில் கொடுக்கப்படும் பெரியவா சங்கதிக்கெல்லாம் மூலமான தெனலாம். 1996 ம் வருடத்திலிருந்த அவர் வித்திட்ட இத்திருப்பணி இன்றளவும் தொடர்வதும் நாயன்மாரின் வாக்கின் சக்தியே!

நாயன்மாரின் திருத்தொண்டு அடுத்த உச்சத்தையும் தொட்டது.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் பலதரப்பட்ட வகையானவர்களைப் பார்க்க முடிகின்றது. அவர்கள் வெவ்வேறான சில தொண்டு புரிந்ததையும் படிக்கின்றோம் சதாகாலமும் சிவனை சிந்தையில் இருத்தும் தன்மையால் அவர்கள் ஒன்றுபட்டாலும் பாடிப் பரவுதல், சிவனடியாரை உபசரித்தல், சிவனடியார்களுக்கு பல்வேறு வகையில் கைங்கர்யம் செய்தல், சிவ தியான வகையில் ஏதோ ஒன்றை பற்றிக் கொண்டு விடாப்பிடியாக இருத்தல், சிவ பக்திக்கு மாறாக பேசுபவர்களை வன்மையாக தாக்குதல் என்று இந்த 63 நாயன்மார்களும் பலதரப்பட்ட பக்தியை காட்டியுள்ளனர்.

இதில் மிக எளியவர்கள்தான் ஏராளம் துணி துவைக்கும் தொழில், மீன் பிடிக்கும் தொழில், வேட்டையாடி உண்ணும் நிலைமை என்ற ஏழ்மையில்தான் பலரைக் காண்கிறோம்.

இறைப்பணியில் மிகவும் கடினமானதும் வருங்காலங் களிலும் நிலைத்து நின்று சிவனருளை சந்ததியினருக்கு வழங்கப்போவதும், அத்தனை சுலபமாக நிறைவேற்ற முடியாத அளவிற்கு அதிக பொருட் பலமும் ஆட்கள் பலமும் தேவையாவதுமான ஒரு பெரும் இறைப்பணி உண்டென்றால் அது அந்த இறைவனுக்கு ஒரு ஆலயம் அமைப்பதென்ப தாகும்.

இந்த திருப்பணியை நாடாளும் மன்னர்கள் மட்டுமே செய்ய வாய்ப்புண்டு. அப்படி பலராஜாக்களின் அருங்குணமே

இப்போது நாம் அருள்பெரும் தெய்வ ஆலயங்களாகி யிருப்பதை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இப்படி ஒரு சிவத்தொண்டினை செய்திடும் மனமும் பொருளும் அமையப் பெற்ற மன்னர்களாக அறுபத்து மூவருள் யார் யார் இருந்துள்ளனர் என்று தேடியதில் ஐயடிகள் காடவர்கோன் நாயனார், காரி நானார், நின்ற சீர் நெடுமாற நாயனார் என்ற மூவர் மட்டுமே மன்னர்களாக காணமுடிகிறது.

இதில் ஐயடிகள் காடவர்கோன் அரசபதவியை துறந்து சிவ தொண்டு புரிந்தவர்.

காரி நாயனார் பதவியிலிருந்தவாறே பல சிவாலயங்களை கட்டியதாகத் தெரிகிறது.

நின்ற சீர்நெடுமாற நாயனார் நெல்லையப்பர் காந்திமதி ஆலயத்தைக் கட்டியதாக அறிகிறோம்.

ஆக அறுபத்துமூவருள் மூவருக்கு மட்டுமே ஆலயம் கட்டும் தகுதி பொருளவில் இருந்தும், மனதளவில் இரு மன்னர்களுக்கு மட்டுமே சிவபக்தியை பரப்பிடும் ஆலயம் அமைக்கும் திருப்பணி செய்ய இயன்றுள்ளது.

இதில் பூசலார் நாயனார் சற்றே தனித்துவமான மனப்போக்கில் இருந்தவர். நித்ய ஜீவனுக்கு பொருளில்லாத நிலையில் மனதளவில் இப்படி சிவனுக்கு ஆலயம் கட்டும் அபிலாஷை இவருக்கு மட்டுமே எழுந்துள்ளது. அவர் மனதில் கட்டிய ஆலயம்போலவே பல்லவ மன்னன் ஒரு கற்கோயிலை கட்டித்தர, பூசலார் அதைப்பார்த்து அதிசயித்ததாக அறிகிறோம்.

இவைகளை எல்லாம் நோக்கும்போது பரமேஸ்வரராய் திருஅவதாரம் புரிந்திருக்கும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளுக்கு ஒரு ஆலயம் எழுப்பிடும் ஆசை எழுந்திருப்பதே அந்த நாயன்மாரின் மேன்மையைக் காட்டுகிறது.

அதோடல்லாமல் பூசலார் போன்ற மனம் கொண்டிருந்தும் பூசலார் போன்றே நிதி வசதியில்



ஏழ்மைநிலை இருந்தும் அக்கால அரசருக்கே சாத்யமாகி யிருக்குமா என்று வியக்கும் வண்ணம் பிரம்மாண்ட ஒரிக்கை கற்கோயிலை ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் ஈஸ்வர திருத் தொண்டாக சாதிக்க முடிந்ததென்றால் இப்பேர்பட்ட திருபணிக்காகவே தெய்வசித்தம் இந்த நாயன்மாருக்கு பிறவி ஈந்துள்ளதென்பது உறுதியாகி நிற்கிறதல்லவா! பூசலாரைப் போன்றே இந்த நாயன்மாருக்கும் அவர் திட்டமிட்டு இப்படித்தான் கட்டப்பட வேண்டும் என்று எண்ணியபடியே ஸ்ரீமஹாபெரியவாளின் கருணை செயல்பட்டு, நாயன்மார் சித்தி அடைந்துவிட்ட சில வருடங்களுக்குப் பிறகு ஓரிக்கையில் ஒரு கற்கோயில் கும்பாபிஷேகம் கண்டுவிட்டது.

உலகெலாம் உய்ய அவதரித்து நூறாண்டு காலமாய் நமக்காகவே வருத்திக்கொண்டு, வருத்தங்களை எல்லாம் போக்கிக் கொண்டு ஒரு சுத்த சந்யாசி தர்மத்தோடு நடமாடும் ஈசனுக்கு நன்றிக் கடன் பட்டதாக அந்த உத்தமர் ஒருவருக்கு மட்டுமே மனம் உறுத்தியிருக்கிற தென்றால் அவருள் ஒளிந்திருந்த அந்த 64ம் நாயன்மாரெனும் புண்ணிய ஆத்மாதான் அதைச் செய்து வைத்துள்ளது.

திருவான்மியூர் க்ஷேத்திரத்தில் மருந்தீஸ்வரர் ஆலயத்தில் முதல் முதலாக தரிசனத்திற்கு தன் முன்னே வந்து நின்றபோதே இவரை 'நாயன்மார்' என்று அத்தெய்வத்திற்கு தெரிந்திருந்தாலும் தன்னை இப்படியெல்லலாம் கூட பக்தி செய்ய முடியுமா என்று அத் தெய்வமே வியந்து ரசிக்க ஆசைப்பட்டதுபோல் காலத்தை கடத்திக் கொண்டிருந்தது.

காதலாகி கசிந்து பக்தி செய்வதில் திருஞானசம்பந்த பாலகனாய்,

'மீளா அடிமை' யாக தாழ்மையை காட்டியதில் அப்பர் பெருமானாய்,

'நான் பெரியவா கிட்டேயே கோவிச்சுக்கிறேன்' என்ற சுவாதீன பக்தியால் சுந்தரராகவும்,

'தந்தது உன் தன்னை கொண்டது என்தன்னை' என்று அந்த ஈஸ்வரரே ஏற்றுக்கொண்ட **மாணிக்க வாசகராகவும்,**

ஸ்ரீ பெரியவா பக்தியை உலகமெலாம் பரப்பிட்ட பாங்கில் இந்த முதல் **நான்கு நாயன்மாராகவும்,**

மனைவி, மக்கள் என்ற எந்த பந்தங்களையும் 'பெரியவா பக்தி'க்கு துறக்கத் தயங்காத தியாகத்தில் **இயற்பகை நாயனாராகவும்,**

ஏழ்மையிலும் ஸ்ரீமஹாபெரியவாளின் வைபவங்களை மனையாளின் மாங்கல்ய தங்கத்தை விற்றும் கொண்டாடிய மாமனத்தில் **இளையான்குடி மாற நாயனாராகவும்,**

ஸ்ரீ மஹாபெரியவாளை பக்தர்கள் பூர்ணமாக உணரவில்லையே என்ற ஆதங்கத்தால் நியாயமான சினம் கொள்வதில் **எறிபத்த நாயனார், சக்தி நாயனாராகவும்,**

மூடம், பித்து என்ற நிலையில் பக்தியை காட்டிய அசாதாரணங்களில் **கண்ணப்ப நாயனாராகவும்,**

எங்கும் பெரியவா, எதிலும் பெரியவா என்று ஏகாந்த பக்தியில் **ஆனாய நாயனாராகவும்,**

முட்டி பரதக்ஷணம், அங்க பிரதக்ஷணம், நட்ட நடு ராத்திரி பக்தி நடை போன்ற கடின விரதங்களால் பக்தி காட்டியதில் **மூர்த்தி நாயனார், கண்ணப்பா நாயனாராகவும்,**

"இவர் தினமும் எனக்கு வில்வம் கொண்டுவந்த தரார் மஹாலட்சுமியை என்மேல் வைச்சுடறார்" என்று ஈஸ்வரரான மஹாபெரியவாளுக்கு நித்தம் வில்வ மாலையுடன் வன்னி, கொன்றை, மதுமத்தம், எருக்கு என தொடுத்த மலர்களை சமர்ப்பித்த பக்தியில் **முருக நாயன்மாராகவும்,**

'நமச்சிவாய' என்ற மந்திரம்போல் 'மஹாபெரியவாளை 'நீலகண்டம், மகாபிரபோ, சதாசிவம், கைலாசபதே, பசுபதே,



மகாதேவா, பரமேஸ்வரா' என்ற மந்திரங்களையே உணவாகவும், உயிராகவும் இமைப்பொழுதும் மறவாத பக்தி சிரத்தையால் **பெருமிழலை குறும்ப நாயன்மாராகவும்,**

ஸ்ரீமஹா பெரியவாளிடம் பக்தி கொண்டவர்கள் மேல் அபரிதமான அன்பும், பரிவையும் காட்டும் உபசரிப்பு பக்தியில் **குலச்சிறை நாயனாராகவும்,**

பெற்ற பிள்ளையின் உயிர் பிரியும் ஆபத்திலும் ஸ்ரீமஹா பெரியவாளின் தரிசனம் தவறியதை பெரும் இழப்பாக கருதிய தளராத பக்தி மேன்மையில் **சிறுத்தொண்டராய், அப்பூதி அடிகளாராய்,**

ஸ்ரீமஹாபெரியாவாளின் திருவடி மலர்களை தன் சிரம் மேல் தாங்கிக் கொள்ளும் அருகதை பெற்றுத் தந்த பக்தியால் **அப்பர் பெருமானாய், கூற்றுவ நாயனாராய்,**

தனக்கென எதுவும் கொள்ளாமல், எந்த நிலையிலும் தன்னிடம் உள்ளதையெல்லாம் ஸ்ரீபெரியவா வைபவங் களுக்கே என அர்ப்பணித்த பக்தியால் **அதிபத்த நாயன்மாராய்,**

ஸ்ரீமஹா பெரியவாளுக்கு கைங்கரியம் செய்ய இயலவில்லையே என்ற தாபத்தோடு தன்னை கங்கையில் கரைத்துக் கொள்ள துணிந்த பக்தியில் **கலிய நாயன்மாராய்,**

ஸ்ரீமஹாபெரியவா கண்கண்ட தெய்வம் என்பதை உலகோர் அறிய அத்தெய்வத்திற்கு பெருங்கோயில் எழுப்ப வேண்டுமென தன் ஏழ்மையிலும் மாமனம் கொண்ட பக்தியால் **பூசலார் நாயன்மாராய்,**

பலகோடி நிதி தேவைப்படும் அந்த பிரம்மாண்டமான தஞ்சை பெரிய கோயிலை ஒத்த உயர்வோடு ஸ்ரீ மஹாபெரியாவளின் அருள் நிதியை சாஸ்வதமாக்கிய ஓரிக்கை பெருங்கோயிலை பூசலார் நிலையில் பொருளற்றவராய் இருந்தும் ஒரு பேரரசு சாதனையாக்கி காட்டியதில் **ஒப்புயர்வற்ற நாயன்மாராய்,**

இப்படி அந்த அறுபத்து மூவரின் அம்சங்களின் ஒட்டுமொத்த பக்தி வடிமான இந்த பக்தரை ரசித்துக் கொண்டிருந்த ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியாவளுக்கு ஒரு புது அனுபவம் எழுந்தது போலானது.

தன்னை உலகோரிடம் மறைத்து, தான் ஈஸ்வரரே என்பதை மறந்தும் இவ்வுலகில் அனுக்கிரஹம் பொழிந்து கொண்டிருந்த பரபிரம்ம சொரூபத்திற்கு, இப்படி இவர் நாயன்மாராய் தன்மேல் உருகி பக்தி செய்வதைப் பார்க்கும் போதெல்லாம் ‘அட! நாம்தானே அந்த சர்வேஸ்வரர்!’ என்ற ஞாபகம் தோன்றியிருக்கலாமோ என்னவோ!

தன்னை சிக்கென பற்றிக் கொண்ட பக்தனின் பிடியிலிருந்து இனி தப்பமுடியாதென்ற நிலையில் இனிமேலும் சோதிக்கலாகாது என்று மனம் கனிந்தது.

காலமும் கனிந்தது! இவர்தான் நாயன்மார் என்று உலகபக்தர்கள் அங்கீகரிப்பதற்குள் தான் முந்திக் கொண்டு விட வேண்டுமென்று நாயன்மாரின் சீரிய பக்தி சிவனையே துரிதப்படுத்தியது.

இதற்கு முன் ஒரு அயல்நாட்டு பக்தரை 65ம் நாயன்மாரென்று சுட்டிக்காட்டிய மஹாபெரியவா இவருக்கென்றே 64ம் இடத்தை விட்டு வைத்திருந்தது போலிருந்தது. இப்போது, “இவர்தான் 64ம் நாயன்மார்” என்ற பொன்னான திருவாக்கு பொன்னார் மேனியரான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளின் திருநாக்கசைவில் தீர்க்கமாக அருளப்பட்டு விட்டது.

அன்று ‘பெரிய புராணம்’ புத்தகத்தை இந்த நாயன்மாரிடம் கொடுத்து திருவிளையாடல் செய்து முடித்த ஈசன் அத் திருவிளையாடல் புராணம் தாங்கி நின்ற அரிய பக்தரை நாயன்மார் என்ற அரிசானம் ஏற்றி உலகோருக்கு தந்தருளினார்.

‘இவரன்றோ நாயன்மார்!’ என்று அத்தெய்வமே தான் வியந்ததை காட்டுவதற்கோ என்னவோ ஒரு முறையல்ல மூன்று முறை “இவர் 64ம் நாயன்மார்” என்று உறுதி செய்த அதிசயமும் நடந்துள்ளது.



இப்படி இவரை ‘நாயன்மார்’ என்று அங்கீகரித்ததில்தான் சர்வேஸ்வரரே என்பதையும் இது தெய்வம் சூட்சமமாக உலகோருக்கு உணர்த்தியது போலானது.

‘இவர் பரமேஸ்வரரே’ என்று பக்தரும் ‘இவர் நாயன்மாரே’ என்று ஈஸ்வரரும் பரஸ்பரம் தெய்வ ரகசியத்தை வெளிப்படுத்திவிட்டது போலானது.

பரஸ்பர பரிமாற்றம் இதோடு நின்றுவிடவில்லை.

❖ ❖ ❖

# 7. முடிசூட்டும் முடிவுரை

**‘நா**யன்மார் இவரன்றோ’ என்ற தலைப்பில் எழுத ஒரு வரையறை செய்து கொண்டுவிட்டதால் இந்த பக்தரிடம் காணும் நாயன்மாருக்கான அம்ச மேன்மைகளை மட்டுமே எடுத்தியம்பிடும் எல்லைக் கோட்டைத் தாண்ட இயலவில்லை.

ஆனால் இந்த நாயன்மாரின் நிலை ஒரு மாபெரும் அதீதமேன்மையை தாண்டிவிட்டது.

பூசலாரின் அம்சங்களை பூர்த்தி செய்துவிட்ட இந்த நாயன்மாருள் நந்திகேஸ்வர அம்சமும் மீதியுள்ளதை பக்தர்களாகிய நீங்கள் எனக்கு நினைவுபடுத்துவீர்கள்.

பிரதோஷ மகிமையில் யுக முடிவில் நந்திதேவர் சிவபெருமானால் அணைத்துக் கொள்ளப்பட்டு அழியாது நின்றார் என்று கண்டுள்ளதை முன்பே கூறியுள்ளேன்.

பூசலாரின் அம்சத்தினை பூர்த்தி செய்யும் பொறுப்பையும் பாக்யத்தையும் நாயன்மாருக்கு ஈந்திட்ட ஈசன், இவரது நந்திதேவரின் அம்சத்தை பூர்த்தி செய்த ஈசன் தானே விழைந்தார்.

சிவபிரான் விடம் உண்டு சயனித்து எழுந்தபின் அம்பிகையும், நந்திதேவரும் மட்டும் தரிசிக்குமாறு தன் சந்தியா நடனத்தை அருளிய கால அவகாசம் மூன்றேகால் நாழிகை என்று காணப்படுகிறது.

கிட்டத்தட்ட அதே கால அவகாசத்தில்தான் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளெனும் ஈஸ்வரர் இந்த நந்திகேஸ்வர நாயன்மாருக்கு ஒரு ஐக்கிய மேன்மையை அருளி தன்னுடன் அணைத்து அழியா நிலை ஈந்துள்ளார்.



சகுன ஈஸ்வரரான ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா சித்தமெலாம் தன்மேல் வைத்திட்ட இந்த நாயன்மாரையும் சிவமாக்கி ஆண்டு கொள்ள விழைந்தார்.

நாயன்மாரை தன்னுடனேயே ஐக்கியமாக்கிக் கொள்ள ஈஸ்வர பெரியவா எண்ணம் கொண்டிருப்பது மெல்ல மெல்ல தெரிய வந்தது.

ஒரு நாள் “கார்த்தாலே இவாளையெல்லாம் நான் நினைச்சுக்கணும்” என்று திருவாக்கினை வெளிப்படுத்திய தெய்வம் அப்படி ஒரு ஐந்து பேர்களை குறிப்பிட்டு அதில் ஒருவராக பிரதோஷ சிவன் நாயன்மாரையும் குறிப்பிட்டார். கூடவே அந்த மகாபுண்ணிய தெய்வம் “இவாளெல்லாம் புண்ணியவான்கள்” என்று இந்த நாயன்மாரின் அரிய நிலையை நமக்கெல்லாம் அறிவித்தருளியுள்ளார்.

மேலும் உன் பூப்போன்ற ‘திருவடிகளை என் சிரம்மேல் வைத்து அருளவேண்டுமப்பா’ என அப்பர் சுவாமிகள் வேண்டிக் கொண்டபடி அவரை ‘வாவா’ என்றழைத்து திருநல்லூர் என்ற ஊரில் தன் மலர்ப்பாதங்களை ஈசன் சூட்டி அருளியதுபோல் இந்த நாயன்மாரின் சிரமும் சிறப்பானதென்பதை அறிவிப்பது போல் ஒன்றல்ல இருமுறை சிதம்பரநாதனின் பொன்மலர் பாதங்கள் நாயன்மாரின்மேல் பதிந்துள்ளன. நந்திகேஸ்வர நாயன்மார் பரமேஸ்வரரின் திருவடிகளை தாங்குவதே மேன்மையல்லவா.

இப்படி படிப்படியாக தன்னிடம் இந்த நாயன்மாரை ஈர்க்கும் திருவிளையாடல்களை நடத்தியபின் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளின் கருணை ஒரு அபாரமான எந்த பக்தருக்குமே அருளாத அரிதான அற்புத நிலையை இந்த விசேஷமான பக்தருக்கு அருளும் தருணம் வரக் காத்திருந்தது.

மாணிக்கவாசப் பெருமான் இறைவனிடம் இப்படி ஒரு வாதம் செய்கிறார். “நம்மில் யார் கெட்டிக்காரர்? ஒன்றுமே இல்லாத என்னை நீ எடுத்துக் கொண்டாய். அதற்கு பிரதி பலனாக முடிவே இல்லாத ஆனந்த சொரூபனாக உன்னையே எனக்குக் கொடுத்துவிட்டாய். இப்போது சொல் அந்தமொன்றில்லாத ஆனந்தமான உன்னைப் பெற்றுக் கொண்ட நானல்லவா பெரிய கெட்டிக்காரன்... இப்பேர்ப்பட்ட பெரும்பதவியை ஈந்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்” என்ற பொருளில்,

**தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்**

என்று ஆரம்பித்து பாடியுள்ளார்.

ஒருநாள் விஸ்வரூப தரிசனத்திற்காக வந்து நாயன்மார் எதிரே நின்றபோது, அந்தமொன்றில்லா ஆனந்த நடராஜ பெரியவாளுக்கு எதிரே தரிசித்து நிற்பது அந்த மாணிக்கவாசகரோ என்று தோன்றியது போலும்.

அதனால் அந்த மாணிக்கமான வரிகள் தன் நினைவிற்கு வந்ததுபோல்,

**‘தந்தது உன்தன்னை**
**கொண்டது என்தன்னை’**

என்று இப்போது இந்த ஈஸ்வரரே இவரைப் பார்த்ததும் தன் திருவாய் மலர்ந்து சொன்னபோது நாயன்மாருக்கும் பக்கத்தில் தரிசித்துக் கொண்டிருந்த பக்தருக்கும் இதன் காரணம் புரியவில்லை.

அதிகாலை தரிசனம் செய்ய வந்து நின்றதும் ஸ்ரீமஹாபெரியவா ஏன் இந்த தேவார வரிகளை காதில் விழும்படி சொல்ல வேண்டும் என்று நாயன்மார் நினைத்துக் கொண்டிருந்தபோதே, அந்த தெய்வம் “உம்... திரும்ப நீங்களும் சொல்லுங்கோ” என்று உத்தரவானதில் நாயன்மாருக்கு மெய்சிலிர்ப்பானது.



இவரும் நா எழாத நிலையில் அந்த வரிகளை ‘தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை’ என்று சொல்லி முடித்தார்.

ஈசன் அதோடு விடுவதாயில்லை.

திரும்ப அதே வரிகளைத் தானும் செப்பி அருளி திரும்ப இன்னொருமுறை இதையே நாயன்மாரையும் சொல்லச் சொன்னார்.

பின் இந்த தெய்வீக சங்கிலி போலானது தானாகவே தொடர்ந்து நிகழும்படி ஆனது.

ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவா ‘தந்து உன் தன்னை கொண்டது என் தன்னை’ என்று திருவாய் மலர, நாயன்மாரின் நாவிலிருந்தும் அது பூக்க, பரம்பொருள் சொல்ல பக்தன் திரும்பச் சொல்ல நடராஜர் சொல்ல, நந்தீஸ்வர நாயன்மார் சொல்ல என்று இந்த அபூர்வமானதொரு திருவிளையாடல் அங்கிருந்தோரை ஆனந்திக்க வைத்தது.

இப்படி ஒரு முறையா, நூறு முறையா என்று எண்ணிக்கையை எல்லாம் மீறி இந்த அற்புத தெய்வ விளையாடல் அதிகாலை நாலு மணிமுதல் ஆறு மணிவரை நடந்தது.

இதை சத்தியமாக தரிசித்த பக்தர்களும் சாட்சியாக உண்டு.

இப்பேர்ப்பட்டதான அபூர்வ அனுக்கிரஹத்தின் காரணம் என்ன இந்த அனுகிரஹத்தின் மேன்மை என்ன என்றெல்லாம் அப்போது நாயன்மாரை இந்த பரமேஸ்வரர் சிந்திக்க விடவில்லை. மாறாக தொடர்ந்து இரண்டரை மணிநேரமாக தன்னுள் இழுத்துக் கொள்ளும் விந்தையை செய்து கொண்டிருந்தார்.

இப்படி ஒரு அபூர்வ ஐக்கியப் பாட்டை இந்த பரஸ்பர மந்திர உச்சரிப்பின் மகிமையால் பூர்ணமாக்கிட நல்கிய ஈஸ்வரருக்கு அன்று நந்திதேவருக்கு நர்த்தன தரிசனம் நல்கிய அவகாசம் கிட்டத்தட்ட தேவையாயிருந்தது போலும்.

இப்படிப்பட்டதோர் அந்தம் ஒன்றிலா ஆனந்த நிலை அடைந்துள்ள இந்த அறுபத்தி நாலாம் நாயன்மாரால் ஸ்ரீபெரியவா பக்தி ருசியை ஆனந்திக்கும் அத்தனை பக்தர்களுக்கும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா இந்த நாயன்மாருள் ஐக்கியமாகி அருளுவதை அனுபவிக்கும் பாக்யம் கிட்டியுள்ளது.

இந்த பக்தர்களின் அனுபவங்களை பிரத்யேகமான தொரு நூலாகத்தான் எழுத வேண்டியிருக்கும். (ஏற்கனவே நாயன்மாரின் அருளால் வெளியான ‘தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை’ நூலில் இதுபோன்ற சம்பவங்களைப் படித்தறியலாம்.

சிவபெருமானால் அணைத்துக் கொள்ளப்பட்டு அழியாத மேன்மை நிலை பெற்ற நந்திதேவராய் இந்த அற்புத நாயன்மாரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாபெரியவாளெனும் ஈஸ்வரரால் மகத்தானதோர் ஐக்கிய அணைப்பான பேரனுக்கிரஹத்தை அடைந்து, அத் தெய்வத்துள் நீக்கமற நிறைந்து நமக்கெல்லாம் இன்றும், என்றும் சாஸ்வத சிரஞ்சீவியாய் அருள்பொழிவது சத்தியமன்றோ!

மிக்க நன்றியுடன்,

**அகிலா கார்த்திகேயன்**

❖ ❖ ❖